# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 44 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


நீட் தேர்வில் மோசடி என்பது மட்டுமல்ல.. நீட் தேர்வே மோசடி..

எளிய மக்களை, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களை உயர்கல்வியிலிருந்து புறக்கணிக்கிற மோசடி..

நீட்-டே வேண்டாம் என்பதுதான் மாணவர்களின் கோரிக்கை..

நீட் உள்ளிட்ட எந்த நுழைவுத் தேர்வுகளையும் இந்திய அரசு அளவில் நடத்தக்கூடாது.. மாநில அரசுகளே நுழைவுத் தேர்வுகளை நடத்திட வேண்டும்..

இந்திய அரசின் நீட்டை வரவேற்பவர்கள் பாஜகவினர் மட்டுமே.. இந்தியா பாஜகவினர்களுக்கு மட்டுமே சொந்தமானதா? அவர்கள் மட்டுமே தேசபக்தர்களா?.. அப்படிச் சொல்வது மோசடி இல்லையா?

தொடக்கத்தில் போராடுபவர்களை வன்முறையாளர்கள், தேசவிரோதிகள் என்றது பாஜக.. இப்போது, நீட் தேர்வுத்தாள் கசிவை அரசியலாக்க வேண்டாம் - என்கிறது..

நீட் தேர்வே அரசியலாக இருக்கிறபோது.. அதை எதிர்ப்பதும் அரசியலாகத்தானே இருக்க முடியும்.. நீட் தேர்வு என்பது குலக்கல்வி திட்டத்தின் புதிய வடிவம் என்கிற அரசியலைக் கொண்டது.. எனவே, அதை எதிர்ப்பதும் புதிய குலக்கல்வித் திட்டத்தை மறுக்கும் அரசியலைக் கொண்டது...

நீட்டை எதிர்க்கும் கட்சிகள், இயக்கங்கள் அனைத்தும் பிற செயல் திட்டங்களை எல்லாம் தள்ளி வைத்துவிட்டு நீட் தேர்வே கூடாது என்பதற்காகப் போராடியாக வேண்டும்..

அனைத்து இயக்கங்களின் கட்சிகளின் சாலைகளும் நீட் எதிர்ப்பை நோக்கி இருக்க வேண்டும்.. தர்மேந்திரப் பிரதானைப் பதவி நீக்கம் செய்வதற்கே இந்தளவு போராட்டங்கள் தேவைப்படுகின்றன என்றால், நீட்டை ஒழிப்பதற்கும், கல்வித் துறையை மாநிலங்கள் பெறுவதற்கும், மாநில உரிமைகளை மீட்பதற்கும் எந்தளவு போராட வேண்டும் என எண்ணிப்பார்க்க வேண்டும்..

திரையரங்குகளையும், பொழுதுபோக்குத் தளங்களையும் ஒரு கிழமை அளவிற்காவது தமிழ்நாடு அரசு நிறுத்திவைக்க ஆணையிட வேண்டும்...

தில்லியிலும் மும்பையிலும்... தமிழ்நாட்டிலும்கூடப் பல இடங்களில் மாணவர்கள் தங்களின் கல்வி உரிமைக்காக, நீட் - டை ஒழிப்பதற்காகத் தங்களின் உயிரைக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.. தமிழ்நாட்டில் கல்லூரிகளுக்குள் புகுந்து மாணவர்கள் இழுத்து வரப்பட்டுத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்..

தமிழ்நாட்டு முதல்வரோ தான் நடித்த திரைப்படத்தை முதல் நாள் இரவு சிறப்புக் காட்சியாகத் தானும் தலைமைச் செயலர் உள்ளிட்ட பொறுப்பாளர்களும் கண்டு களிக்கின்றனர்..

மறுநாள் காலை மதுகுடித்து வெறியாட்டம் போடுகிற நடைமுறை போல் குத்தாட்டம் போட்டுக்கொண்டு நடிகர் விஜய்யின் விசிறிகள் திரையரங்களுக்கு முன்பு குவிந்து கிடக்கின்றனர்..

தமிழ்நாட்டில் ஒருபுறம் போராட்டம் எழுச்சியாக இருக்க.. இன்னொருபுறம் நாற்றமெடுத்துக் குமட்டுகிறது..

## மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாடு

**தமிழ்நாட்டு உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராக அணிதிரள்வோம்!**

========

2026, ஆகத்து 9
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3 மணி முதல்
9 மணி வரை

========

புதுக்கோட்டை
நகர்மன்றத் திடலில்..

======

மாநாட்டு முழக்கத்தை வலியுறுத்திப் பேரணி..
பிற்பகல் 3 மணிக்குத் திருவள்ளுவர் சிலையிலிருந்து..
புதுக்கோட்டை நகர் மன்றம் நிகழ்ச்சித் திடல் வரை..

அனைவரையும் அழைக்கிறது..

**தமிழக மக்கள் முன்னணி**

# மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாடு

## 2026 ஆகத்து 9 ஆம் நாள் புதுக்கோட்டையில்..

**தேர்தல் அரசியலில் பங்கேற்காத,**
**மார்க்சிய பெரியாரிய அம்பேத்கரியக் கோட்பாடுகளை ஏற்கிற,**
**தேசிய உரிமைகளை முதன்மையாக எண்ணி உயர்த்திப் பிடிக்கிற..**
**இயக்கங்கள் அனைத்தும் பங்கேற்கிற மாநாட்டை ஒருங்கிணைத்துத் திட்டமிட்டு நடத்த இருக்கிறது தமிழக மக்கள் முன்னணி..**

நடந்து கொண்டிருக்கிற அரசியல் சூழல்கள், தமிழ்நாட்டில் மட்டுமின்றி இந்தியாவில் அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் அனைத்து மாநிலங்களின் அடையாளங்களையும் முற்றிலும் அழிக்கிற செயல்பாடுகளாக மாறி வருகின்றன..

மாநிலங்கள் அனைத்தும் தனித்தனித் தேசிய இனங்களாக இருக்க.. அவற்றை அடையாளப்படுத்தியிருக்கிற உரிமைகளைக்கூட அந்தந்த மாநிலங்கள் இழந்துவிட்டிருக்கின்றன..

இத்தகைய சூழலில் மாநிலங்கள் அனைத்தும் முற்றதிகாரத்தோடு இயங்க வேண்டிய அரசியலைப் பயிற்றுவிக்கும் நோக்கத்தில்.. மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு மாநாட்டைத் தமிழக அளவில் முன்னெடுத்து நடத்த இருக்கிறது தமிழக மக்கள் முன்னணி..

**ஆகத்து 9, ஞாயிறு**
**பிற்பகல் 3 மணி முதல் இரவு 9.30 மணி வரை**
**புதுக்கோட்டை, நகர்மன்றம் அரங்கில்**
**நடைபெறுகிறது.**

**மாநாட்டு முழக்கத்தை வலியுறுத்திப் பேரணி: மூன்று மணிக்கு.. புதுக்கோட்டை சின்னப்பா பூங்கா திருவள்ளுவர் சிலையில் இருந்து.... புதுக்கோட்டை நகர் மன்றம் நிகழ்ச்சித் திடல் வரை நடைபெறுகிறது.**

*பேரணித் தலைமை :* தோழர் **நாகேசுவரன்**

*தொடங்கி வைப்பவர்:* அம்மா **சித்திரா செயராமன்**
**செவ்வேள்** (மக்கள் தமிழகம் கட்சி)
**செள. சுந்தரமூர்த்தி**
(தமிழர் விடுதலைக் கழகம்)
**ஏ.தெய்வமணி**
(அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம்)
**கோப்பெருஞ்சோழன்**
(தமிழ்த்தேசிய மக்கள் விடுதலைக் கழகம்)

*பேரணியில் முழக்கமிட்டு ஒழுங்கமைப்பவர்கள்:*
தோழர்கள்.. **விடுதலைச்செல்வன்**
**மதனகவி**
**நாகேந்திரன்**
**ஒப்புரவாளன்**
**கபிலன்**
**புகழரசன்**
**இளமதி**

*மாநாட்டின் வரவேற்புரை:* தோழர் **வேணுகோபால்**
(சம்பை ஊற்றுப் பாதுகாப்பு இயக்கம்)

*தலைமை :* தோழர் **பாவெல்**
(தமிழக மக்கள் முன்னணி)

*நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:* தோழர் **சுப்பு மகேசு**
பேராசிரியர் **தமிழிசைப்பா**

*கலை நிகழ்ச்சி:* தோழர் **செயக்கிருட்டிணன்**
(பெரியாரிய அம்பேத்கரிய மக்கள் இயக்கம்)
**குழந்தை ஈகவரசன்**
**சந்தனமேரி**
**காஞ்சி அழகுஒளி**

**தமிழ்நாட்டின் தேசிய முற்றதிகார உரிமைகளுக்காகவும் மாநில அரசின் தன்னாட்சி உரிமைகளுக்காகவும் முழங்கிப் போராடிய தோழர்கள், தலைவர்களின் படத்திறப்பும் அவர்களின் நினைவுத் தூணுக்கு ஒளி ஏற்றிச் சூளுரை மேற்கொள்ளுதலும்:**

*ஒளியேற்றி வைத்துச் சூளுரை முழக்கமிடுவோர்:*

தோழர்கள்... **துரை சித்தார்த்தன்**
(மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி)
**அரங்கநாடன்** (அரியலூர்)
**சீவானந்தம்**
(தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம்)
புலவர் **குணசேகரன்**
(தமிழ்த் தேச முன்னேற்றக் கழகம்)
**ஆ. காத்தமுத்து**
(முகவை மாவட்டம் - த ம முன்னணி)
**இரா. சந்திரசேகரன்** (மயிலாடுதுறை)
வழக்கறிஞர் **தயாநிதி** (சிதம்பரம்)
**தமிழரசன்** (கடலூர்)
**செல்வகணபதி** (செயங்கொண்டம்)
**தமிழ்ப்பித்தன்** (மதுரை)
**தமிழ்முகம்** (சென்னை)
**தம்பி மண்டேலா** (சென்னை)
**செந்தமிழ்வேந்தன்** (பெரம்பலூர்)
**சுவை. முருகேசன்** (செயங்கொண்டம்)
**பாஸ்கர்** (செயங்கொண்டம்)

*தீர்மானங்கள் முன்மொழிவு:* தோழர் **தங்க. குமரவேல்**
(தமிழக மக்கள் முன்னணி)

*மாநிலங்களின் உரிமைப்பறிப்பு விளக்கக் குறிப்புநூல் வெளியீடு:*
தோழர் **பொழிலன்**
(தமிழக மக்கள் முன்னணி)

*தீர்மானங்களை வலியுறுத்தி உரையாற்றுவோர்:*
பேராசிரியர் **த. செயராமன்**
தோழர் **கண. குறிஞ்சி**
தோழர் **நிலவழகன்**

*மாநாட்டின் நோக்கத்தை முன்னிலை வகித்து வலியுறுத்துவோர்:*
தோழர் **பசும்பொன்பாண்டியன்**
(அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழகம்)
**தடா இரவி**
(தமிழர் தன்மானப் பேரவை)

**கஸ்தூரிரங்கன்** (ஆசிரியர்)
**மூக்கையன்**
(சனநாயகத்திற்கான தொழிலாளர் கட்சி)
**தினேசுகுமார்**
(புரட்சிகர கம்யூனிஸ்டுக் கட்சி)
**சசிகுமார்** (புதிய சமத்துவக் கட்சி)
**சந்திரசேகர்**
(தமிழ்த்தேசிய மீட்சி இயக்கம்)
**இரா. செந்தில்**
(ஏகாதிபத்ய எதிர்ப்பு இயக்கம்)
**பி.கே. முருகேசன்**
(பெரியார் அம்பேத்கார் மக்கள் கழகம்)
**பழனி** (சமூக சமத்துவக் கூட்டமைப்பு)
**விமலா** (குமுக ஆர்வலர்)
**அமுதன்** (நாலுமூலைக்கிணறு)
**நா.மெய்ச்சுடர் வெங்கடேசன்**
(ஆசிரியர், மெய்ச்சுடர்)
**இரா. எழுகதிர்**
(தமிழ்வழிக்கல்வி இயக்கம்)
**மகாலட்சுமி**(பெண்கள் எழுச்சி இயக்கம்)
**நெடுவை பழ.திருமுருகன்**
(தமிழக மக்கள் புரட்சிக் கழகம்)
**செல்வராசு** (கம்பூர்)
**ரெ.கருணாநிதி**
**மாணிக்கம்** (மார்க்சு படிப்பு வட்டம்)
**பெரியார்முத்து**
(திராவிடர் விடுதலைக் கழகம்)
**திருவேங்கடம்**
(திராவிடர் விடுதலைக் கழகம்)
**குணசேகரன்**
(சுதந்திர வளர்ச்சிக்கான விவசாய சங்கம்)
**அமுதன்**
(சோசலிசத்தொழிலாளர் இயக்கம்)
**மெய்யப்பன்**
(பாட்டாளி வர்க்க சமரன் அணி)
**வெங்கடேசு**
(தமிழ்நாடு சவளி வணிகத் தொழிலாளர் பேரமைப்பு)
**அ. தருமசேகர்** (புதுக்கோட்டை)
**பாபு இராசேந்திரன்**(தாய்த்தமிழ்ப் பள்ளி)
**இராசா** (தாய்த் தமிழ்ப் பள்ளி)
**கண்ணன்** (உழைப்போர் இயக்கம்)
**பிரபாகரன்** (மருதம் மீட்பு இயக்கம்)
**நிவேதா** (தமிழ்நாடு பெண்கள் சங்கம்)

***சிறப்பிக்கப்பெறும் புதுக்கோட்டை, முகவை, சிவகங்கை மண்டலத்தின் செயற்பாட்டாளர்கள் கலையியல் சான்றோர்கள்:***

பேராசிரியர் **கோச்சடை**
பேராசிரியர் **அரசமுருகுபாண்டியன்**
தோழர் **தமிழரிமா**
(தொழிலாளர் விவசாயிகள் கூட்டமைப்பு)
தோழர் **கணேசன்**
(மக்கள் கம்யூனிசுடு கட்சி)
புலவர் **சுரேசு** இராசசிம்ம மங்கலம்
கலைவேந்தர் **இலெ. கவிராசு** வீரமங்கலம்
**புதுகை பூபாளன் பிரகதீசுவரன்** புதுக்கோட்டை
ஆசிரியர் **சேக்கிழார்** முகவை
புதியதடம் **மேகவண்ணன்** இராமேசுவரம்
கல்விச்சோலை **ஆறு கதிரவன்**
ஆசிரியர் **நீ. இளங்கோ** சிவகங்கை
ஆசிரியர் **சந்திமாவோ** சிவகங்கை
தோழர் **சந்தனமேரி** திருவாடணை

***சிறப்புச் செய்வோர்:***
அம்மா **அற்புதம்**
தோழர் **பேரறிவாளன்**
ஐயா **பி. வரதராசன்** மதுரை
ஆசிரியர் **எழிலன்**(இராமர்) காரைக்குடி
ஐயா **இரா. கழராம்பன்** திண்டுக்கல்

***தீர்மானங்களை வழிமொழிந்து உரையாற்றுவோர்:***

தோழர் **கொளத்தூர் மணி**
(திராவிடர் விடுதலைக் கழகம்)
தோழர் **வாலாசா வல்லவன்**
(மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி)
தோழர் **பாலன்**
(தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சி (மா. இலெ. மா.)
தோழர் **வெற்றிவேல் செழியன்**
(மக்கள் அதிகாரம் கழகம்)
தோழர் **கோவன்**
(மக்கள் கலை இலக்கியக் கழகம்)
தோழர் **சீனி விடுதலை அரசு**
(தந்தை பெரியார் திராவிடர் கழகம்)
தோழர் **பிரவீன்**
(மே 17 இயக்கம்)
தோழர் **மங்கையர்ச்செல்வன்**
(தமிழ் மீனவர் விடுதலை வேங்கைகள்)
தோழர் **மு. அறிவொளி**
(திராவிடர் கழகம், புதுக்கோட்டை)
தோழர் **குமரன்**
(புரட்சிகர இளைஞர் முன்னணி)
தோழர் **கி. வே. பொன்னையன்**
(தற்சார்பு விவசாயிகள் சங்கம்)
பேராசிரியர் **பிரபா. கல்விமணி**
(மக்கள் கல்வி இயக்கம்)
தோழர் **சிவலிங்கம்**
(சுயமரியாதை தலித் சக்தி, பெங்கலூர்)
தோழர் **ஆலப்பாக்கம் முருகேசன்**
(தமிழ்நாடு விடுதலைப் படை)
தோழர் **திருநாவுக்கரசு**
(தாளாண்மை உழவர் இயக்கம்)
தோழர் **பழனிராசன்**
(சமவெளி விவசாய சங்கம்)
தோழர் **மெய்யப்பன்**
(தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம்)
தோழர் **மதியவன் இரும்பொறை**
(தமிழ்த் தேச மார்க்சியக் கழகம்)
தோழர் **சின்னப்பத் தமிழர்**
(தமிழ்வழிக்கல்வி இயக்கம்)
தோழர் **வளர்மதி**
(பொதுநல மாணவர் எழுச்சி இயக்கம்)
முனைவர் **ப. குணசேகரன்**
(சாமானிய மக்கள் கட்சி)
தோழர் **இராசு**
(ஐந்திணை மக்கள் கட்சி)
தோழர் **வ. யோகேசுவரன்**
(சிபிஐ (மா இலெ) மாஸ்லைன்)
தோழர் **காஞ்சி அமுதன்**
(தமிழ் உரிமைக் கூட்டமைப்பு)
தோழர் **க.பா. சீனிவாசன்**
(தாய்த் தமிழர் இயக்கம்)
தோழர் **லூர்துசாமி**
(அம்பேத்கர் பெரியார் மார்க்ஸ் படிப்பு வட்டம்)
தோழர் **செந்தீ நாகவரசன்**
(செந்தீ கலை இலக்கியக் கழகம்)
முனைவர் **வினோத்**
(தமிழ்த் தேசிய மீட்சி இயக்கம்)

மாநாட்டு நன்றியுரை :
தோழர் **சுரேசு**
(தமிழ்நாடு முற்போக்கு மாணவர் இயக்கம்)

# தமிழக மக்கள் முன்னணி

# மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு என்பது.. தமிழ்த் தேச விடுதலை அரசியலுக்கு முரணானதா?

**பொழிலன்**
தமிழக மக்கள் முன்னணி

மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு என்பது.. தமிழ்த் தேச விடுதலை அரசியலுக்கு முரணானதா?

மார்க்சியக் கோட்பாட்டின் அடிப்படையில் பாட்டாளிகளின் புரட்சி அரசியலை முன்னெடுப்பவர்கள் தமிழ்த் தேசிய அரசியலைப் பேசவோ போராடவோ கூடாதா?

புதுக்கோட்டை மாநாடு அறிவிக்கப்பட்ட பிறகு, அதைப் பார்த்துப் பலரும் இவ்வாறு சில கேள்விகளை எழுப்புகின்றனர்.

மாநில உரிமைப் பறிக்கப்படுவதை எதிர்த்துவிட்டால் எல்லாம் கிடைத்துவிடும் என்று நம்மில் எவரும் சொல்லவும் இல்லை, நம்பவும் இல்லை..

*அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு* என்று முழங்கிய திமுக, 1963 இல் பிரிவினைத் தடைச் சட்டத்தை இந்திய அரசு அறிவித்தவுடன், பிரிவினைக்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன நாங்கள்தாம் கைவிட்டு விட்டோம் என்றதும், *மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி* என்ற அளவில் மட்டுமே திமுக முழங்கியதை அரசியல் தொடர்புள்ளோர் அறிந்திருப்பர்.

மாநிலங்களில் சுயாட்சி என்கிற தன்னாட்சி என்பதற்கும், மத்தியில் கூட்டாட்சி என்பதற்கும் திமுக கொடுத்த விளக்கம்:

இந்திய அரசு அளவில்...

1. **படை வைத்திருக்கும் அதிகாரம்,**
2. **பணம் அச்சிடுவது உள்ளிட்ட அதிகாரம்,**
3. **அயல் உறவுத்துறை அதிகாரம்,**
4. **மாநிலங்களுக்கு இடைப்பட்ட தொடர்பு அதிகாரம்**

- இவை நான்கு அதிகாரங்களும் இந்திய அரசு வைத்திருக்க, மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே.

இதற்காக 1969ல் திமுக அரசு இராசமன்னார் குழு என்கிற ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு 1971 மே மாதத்தில் அறிக்கையை நிறைவு செய்து தமிழ்நாடு அரசிடம் கொடுத்தது. அந்த அறிக்கை சில திருத்தங்களுடன் 1974 ஏப்ரல் 16 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்வைக்கப்பட்டுத்தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

அதன் பிறகு மாநில உரிமைகள் குறித்துப் பலமுறை திமுக கட்சியால், அது ஆட்சிப் பொறுப்பேற்ற பொழுது பேசப்பட்டதே அல்லாமல் பெரும் போராட்டமாகத் திமுக முன்னெடுத்து நடத்தியது இல்லை.

1972, 73, 75 - ஆகிய ஆண்டுகளில் தென்மொழி இயக்கத்தின் வழியாகப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் **தமிழ்நாடு விடுதலைக்கான மாநாட்டை** நடத்திய பொழுது அவர்களைச் சிறைப்படுத்திய திமுக அரசு, மாநில சுயாட்சி கேட்பதாக இருந்தால் உங்களை விடுதலை செய்துவிடுகிறோம் என்று கேட்டுக்கொண்டது, அதற்கு அன்றைக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் "நாங்கள் மாநில சுயாட்சி கேட்கவில்லை; தமிழ்நாடு விடுதலைதான் கேட்கிறோம்" என்று வலியுறுத்திச் சொல்லவே, தென்மொழி இயக்கத்தினரைச் சிறையில் அடைத்தது திமுக அரசு.

1990 இல் **"தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்! தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்!"** என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் தொடக்கத்தில் இதே போன்று, நான்கு அதிகாரங்களையும் நடுவண் அரசுக்கு அளிப்பதாகவும் மற்ற அதிகாரங்களை மாநிலத் தேச அரசுகள் வைத்திருக்கும் என்றும் அறிவித்தனர். தமிழர் தேசிய இயக்கம் தொடங்கிய நெடுமாறன் ஐயா அவர்களும் இதேபோன்ற தான அறிவிப்பையே செய்திருந்தார்.

1993 தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, தமிழர் தேசிய இயக்கம், தமிழ் தமிழர் இயக்கம் ஆகிய மூன்று இயக்கங்களும் ஒருங்கிணைந்து தொடங்கப்பட்ட தமிழ்த் தேசியத் தன்னுரிமை முன்னணியின் வரையறையிலும் இந்த நான்கு அதிகாரங்களைக் கொண்ட நடுவண் அரசையும் மற்ற அதிகாரங்களைக் கொண்ட மாநிலத் தேசிய அரசுகள் இயங்கும் என்றும் அறிவித்தனர்..

2009 இற்குப் பிறகு தொடங்கப்பட்ட நாம் தமிழர் கட்சியும் தன்னுடைய தேர்தல் அறிக்கையின் வழி மாநிலத் தேசங்களுக்குத் தன்னாட்சி அனைத்து அதிகாரங்கள் என்றும், நடுவண் கூட்டாட்சிக்கு (அதே) நான்கு அதிகாரங்களும் என்றே வரையறை செய்தது..

இந்த வகையில் நான்கு அதிகாரங்களை நடுவண் அரசுக்கு அளிப்பது ஒரு பெரும் ஏமாற்ற நிலை. படைவலுவும் பணவலுவும் எங்கிருக்கின்றனவோ அங்கு அனைத்து அதிகாரங்களும் குவிந்து விடும் என்பதை அவர்கள் உணர மறந்தனர்.

இவர்கள் இந்த நிலையில் இருக்க, பொதுவுடைமைக் கட்சியினரோ அதைக்கூடப் பேச தயங்கினர்.

இந்திய மார்க்சிய இலெனினியக் கட்சிகள் இயக்கங்கள் எவையும் இது போன்றதான நிலையில் இரண்டு அரசுகளின் அதிகாரங்களின் பொறுப்புகள் குறித்தான விளக்கங்களில் எல்லாம் கவனம் செலுத்தவில்லை.

அதே நேரத்தில்,

1942இல் செப்டம்பர் மாதம் நடுவக்குழுத் தீர்மானம் கூறுவதாக (1994 ஆம் ஆண்டு பிப்ரவரியில் வெளிவந்த) 'மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் பெருமை மிக வரலாறு' நூலில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் அர்கிசன் சிங் சுர்ஜித் கீழ் வருமாறு எழுதி இருப்பார்:

> *"தனது தாயகமாகத் தொடர்ச்சியான பகுதி, பொதுவான வரலாற்றுப் பாரம்பரியம். பொதுவான மொழி, கலாச்சாரம். மனவியல் அமைப்பு மற்றும் பொதுவான பொருளாதார வாழ்க்கை ஆகியவற்றைக் கொண்ட இந்திய மக்களின் ஒவ்வொரு பிரிவினரும் அவர்கள் விரும்பினால் பிரிந்து செல்லக்கூடிய உரிமையுடன், சுதந்திர இந்திய ஒன்றியத்திலோ அல்லது கூட்டமைப்பிலோ ஒரு சுயாட்சி மாநிலமாக இருக்கும் உரிமை உடைய தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்படும்."*

இதற்கான மேலதிகமான விளக்கங்கள் ஏதும் அந்த நூலிலும் இல்லை, அதன் பிறகான கட்சி வெளியீடுகளிலும் இல்லை.

பிரிந்து போகும் உரிமை பற்றியான கோரிக்கையை யார் கேட்பது? யாரிடம் கேட்பது? அதற்கான அங்கீகாரத்தை யார் தருவது? ஒன்றியம் என்றால் என்ன?, அவர்கள் சொல்லி இருக்கிற கூட்டமைப்பு என்றால் என்ன? சுயாட்சி மாநிலம் என்றால் எப்படி?

அப்படியான எந்த அரசியல் விளக்கமும் இல்லை, கட்சித் தோழர்களுக்கேகூட அது பற்றியான கேள்விகளும் இல்லை.. விளக்கங்களும் இல்லை..

இன்றைய இந்திய அரசு அமைப்பு ஒன்றிய அரசு அமைப்பா? கூட்டமைப்பா?

அல்லது மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சி புரட்சிக்குப் பின்னர் அமைக்கக்கூடிய அரசை ஒன்றிய அரசு என்று குறிப்பிடுகிறார்களா?
என்று எந்த விளக்கமும் இல்லை.
அதனால் ஒரு மாநில அரசின் உரிமைகள் எவை எவை? அவற்றை எப்படிப் போராடிப் பெறுவது? ஒன்றிய அரசின் அதிகாரங்கள் எவை? அவற்றை யார் உறுதி செய்வது?

- என்றபடியான கேள்விகள் அந்தக் கட்சியிடம் இல்லை அதற்கான விளக்கமும் அதனிடம் இல்லை..

ஏறத்தாழ இந்திய மார்க்சிய இலெனினியக் கட்சிகளும் அதே தெளிவற்ற நிலையிலேயே பதிவு செய்திருக்கின்றன.

> *"மகத்தான நம் தாய்நாடு துண்டாடப்படுவதைச் சரி செய்கின்ற விதத்தில், இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கூட்டமைப்பு அமையவேண்டுமென்றுகூடத் தொலைநோக்குப் பார்வை கொண்டுள்ளோம். நாம் காலிஸ்தான் கோரிக்கையையோ, ஒரு சுதந்திர அஸ்ஸாம் எனும் கோரிக்கையையோ ஒருபோதும் ஆதரித்தது கிடையாது.*
>
> *தேச ஒற்றுமை என்பது காங்கிரஸ் பி.ஜே.பியாக இருந்தாலும் சரி, சந்தர்ப்பவாத இடதுசாரி அல்லது புரட்சிகர கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் சரி, அனைத்து முக்கிய அரசியல் நீரோட்டங்களும் நிச்சயமாகக் கவலை கொள்கிறதோர் முக்கிய விசயமாகும். முக்கிய விசயமென்பது, பல்வேறு நிலைப்பாடுகளுக்கிடையில் கறாரான எல்லைக் கோட்டை வரைந்து கொள்வதாகும்."*

என்று எழுதியிருப்பது ஏதோ காங்கிரசுக் கட்சியோ, பாரதீய சனதா கட்சியோ அல்ல. இ.பொ.க. (மா.இலெ) கட்சிதான் இப்படித் தன் கட்சி ஆவணத்தில் (5ஆம் காங்கிரசில் - திசம்பர் 1992 - கல்கத்தா) குறிப்பிட்டிருக்கிறது.

அப்படி அக்கட்சி குறிப்பிட்டு எழுதியிருப்பதிலிருந்து அது தன் தாய்நாடு என இந்தியாவை எந்த அடிப்படைத் திட்டத்தில் சொல்லுகிறது என்றோ, எந்த அடிப்படையில் அது 'மகத்தானது' என்று குறிப்பிட்டுக் கொள்கிறது என்றோ தெளிவு பெற்றிருக்கவில்லை என்பதே தெரிகிறது.

முதலாளிய வகுப்புகளும், வல்லரசியமும் மகத்தானதாகக் கருதிக்கொண்டிருக்கிற இந்திய தேச ஒற்றுமை எனும் கருதுகோள்கள் எப்படி ஒரு பாட்டாளி வகுப்புக்கான கட்சிக்கும் மகத்தானதாக இருக்கமுடியும் என்பதில்கூட அது விளக்கப்படுத்தவில்லை.

இறுதியாக,

> *"தேச ஒற்றுமையை மேலிருந்து கட்டுகிற இந்த பிஸ்மார்க்கிய வழியை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். நாம், அனைத்துத் தேசிய இனக் குழுக்கள் மற்றும் தேசிய சிறுபான்மையினருக்குச் சாத்தியமான அதிகபட்ச சுயாட்சியை உத்திரவாதப்படுத்தி, கீழிருந்து கட்டப்படும் தேச ஒற்றுமைக்காக நிற்கின்றோம். ஒரு சனநாயக அடிப்படையில் இந்தியத் தேசத்தை ஒன்றுபடுத்துவது என்பது இந்திய சனநாயகப் புரட்சியின் முக்கியமானதோர் கடமையாகத் திகழ்கிறது."*

என்று மேலும் விரிவாக இ.பொ.க. (ம.இலெ.) கட்சி ஆவணங்கள் 5ஆம் அகில இந்தியக் காங்கிரசில் (திசம்பர் 1992- கல்கத்தா) நிறை வேற்றப்பட்ட தீர்மானம் (பக். 20- 26) சொல்லுகிறது.

இதன்படி தனக்குத்தானே இ.பொ.க.(மா.இலெ)வினர் முரண்பட்டுக் கொள்வதையும் நாம் எளிதே பார்க்க முடிகிறது.

ஒருபுறம் இந்தியாவை ஒரு நீண்ட பாரம்பரியமுள்ள ஒரு மகத் தான நாடெனப் பெருமைப்பட்டுக் கொள்ளுகிற இவர்களே, அவ் இந்தியாவிற்குச் சில பத்தாண்டுகளே இந்திய நாடு என்கிற முகம் ஏற்பட்டிருப்பதாக ஏற்றுக் கொள்கின்றனர்.

மேலும் அத்தகு இந்திய நாடு என்கிற முகம் எப்படி ஏற்பட்டது என்றால் காலனி எதிர்ப்பு, விடுதலை இயக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் சனநாயகப் போராட்டங்களால் உருவானது என்பதாகக் கூறிக் கொள்கின்றனர்.

ஆக, இவர்களுக்குப் பழைய வரலாறும் தெரியவில்லை. அண்மைக் காலத்தில் நடைபெற்ற ஆங்கில வல்லரசு எதிர்ப்புப் போராட்ட வரலாறும் தெரியவில்லை என்பது தெளிவாகிறது.

ஆங்கில வல்லரசு எதிர்ப்புப் போராட்டங்கள் ஆங்காங்கு இருந்த நிலவுடைமை அரசுகளின் நிலவுடைமை வணிக முதலாளிய வழிப் பட்ட தேச எழுச்சிகளாகவே நடைபெற்றதும் - அவை பிரிட்டிசு நிழலில் தொடங்கப்பட்ட காங்கிரஸ் மற்றும் ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்ட பார்ப்பனியக் கருத்தாளர்களின் ஆதிக்க நலனுக்காக இந்திய அளவில் ஒருங்கிணைக்கப்பட்டதுமான வரலாற்றை அவர்கள் மீண்டும் படித்தாக வேண்டும்.

தெலுங்கானா எழுச்சிகளும், வங்காள எழுச்சிகளும், மராட்டிய எழுச்சிகளும், தமிழக, கேரள எழுச்சிகளும் இந்திய நாட்டு உருவாக் கத்தை நோக்கியா திரண்டன?

ஆனால், அவற்றையெல்லாம் காங்கிரசு, ஆர்.எஸ்.எஸ் போன்ற இந்தியப் பார்ப்பனிய இயக்கங்கள் ஒருங்கிணைத்து இந்திய உருவாக்கத்திற்கு வலுவூட்டிக் கொண்டன

அதனால்தான் மகாத்மா பூலே, அயோத்திதாசப் பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், அம்பேத்கர், பெரியார், அய்யன்காளி, நாராயணகுரு உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் அடித்தட்டு மக்க ளின் உரிமைகளுக்காகப் போராடியவர்கள், ஆங்கிலேய வல்லரசை அன்றைக்கு எதிர்த்ததைவிட இந்தியப் பார்ப்பனியத்தை எதிர்த்தனர்.

வெள்ளையனைவிட இந்தியப் பார்ப்பனியம் என்கிற கொள்ளையன் மோசமானவன் என்பதாக அறிவித்தனர்.

ஆக, அந்தப் பார்ப்பனிய இந்திய அதிகார வகுப்பின் நாட்டுருவாக்க முயற்சியைத்தான் இந்த மா.இலெ. இயக்கத்தினர் இந்திய நாட்டுருவாக்கமாக எண்ணி மயங்கி ஏற்கின்றனரா என்ன?

பார்ப்பனிய அதிகார வகுப்பின் வரலாற்றுக் குழப்பங்களின் மயக்கத்திலிருந்து விடுபடாமல் அவர்களுக்கு எப்படி இந்தியா என்கிற மயக்கம் தெளிவாக முடியும்.

அகில இந்தியப் புரட்சியும், பின்னர் அதிலிருந்து பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய 'சுய நிர்ணய' உரிமையைப் பல்வேறு தேசங்களுக்கும் வழங்குவது எனும் அடிப்படையிலேயே அவர்கள் இந்தத் தேசிய விடுதலை(சுதந்திரங்)களுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறுகின்றனர்.

ஆதரவளிப்பது என்பது வேறு, தாங்களே முன்னெடுத்துப் போராடுவது என்பது வேறு.

பாட்டாளி வகுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துப் போராடாமல் அதற்கு ஆதரவளிப்பதாகக் கூறிக்கொள்வது எப்படி பாட்டாளி வகுப்புப் புரட்சி - என்பதான நோக்கமுடையதாக முடியாதோ அப்படியே தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துப் போராடாமல் ஆதரவளிப்பது என்பதும் தேசிய விடுதலை நோக்கமுடையதாக ஆக முடியாது.

இவை மட்டுமின்றி,

> *"ஆங்கிலேய காலனியவாதிகள் நமது நாட்டின் பல்வேறு தேசிய இனங்களையும் பலாத்காரமாக இணைத்து இந்தியாவை ஒரே நாடாக்கினர். எனவே* ***இந்தியா பல்வேறு தேசிய இனங்களின் சிறைக் கூடமாயிற்று.***
>
> ***தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் அனைத்துத் தேசிய இனங்களின், தேசிய, மதச் சிறுபான்மையோரின் நியாயமான உரிமைகளை ஆளும் வர்க்கங்கள் நசுக்குகின்றன.*** *நாகர்களுக்கும் மிசோக்களுக்கும் காஷ்மீரிகளுக்கும் சுயநிர்ணய உரிமையை*

*மறுக்கின்றன. அனைத்து மொழிகளுக்கும் சமமான தகுதி மறுக்கப்படுகிறது. இந்திய அரசின் கொள்கைகள் தேசிய ஒருமைப்பாட்டிற்கோ பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியத்துக்கோ அல்லாமல் சீர்குலைவு மற்றும் பிளவுக்கே இட்டுச் சென்றுள்ளது. இந்திய நாட்டில் தேசிய இன ஒடுக்குதலை ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏவல் செய்யும் தரகு முதலாளித்துவ வர்க்கம் மேற்கொள்ளுகிறது."*

என்று (மாநில அமைப்புக்குழு இ.பொ.க. (மா.இலெ.) மூன்றாம் பதிப்பு 1996இல்) கூறுகிறது.

ஒருபுறம் இந்தியாவைத் தேசிய இனங்களின் சிறைக்கூடம் என ஒத்துக்கொள்கிறவர்கள், 'நமது நாட்டின்' பல்வேறு தேசிய இனங் களையும் பலாத்காரமாக இணைத்து இந்தியாவை ஒரே நாடாக்கினர் என்று சொல்வதன்மூலம் நமது நாடு என்ற ஓர் ஏற்பிசைவையும் அதற்குக் கொடுக்கின்றனர். இந்தியாவை ஒரே நாடாக ஆக்கியது ஆங்கிலேயக் காலனியவாதிகள் என்றால், அதற்கு முன் இந்தியா என்பது ஒரே நாடாக இல்லை எனத் தெளிவாகிவிடுகிறது.

தேசிய இனங்களின் சிறைக்கூடமாக, காலனியாதிக்கவாதிகளால் உருவாக்கப்பட்ட இந்தியா ஏதோ 1500 காலப் பழமையுடையது என்று கூறுவது எந்த வகையில் பொருந்தக்கூடியது.

ஆக, வழக்கம்போல் தங்களின் கோட்பாட்டின் பல்வேறு முனை களிலும் தெளிவற்றபோக்கையே மேற்கொள்ளுகிற இவர்களுக்கு இந்தியாவைப் பற்றிய வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் குழப்பமே தலைதூக்கி நிற்கிறது.

எனவேதான், இந்தியாவை நாடு என்பவர்கள் இன்னோர் இடத்தில் தேசம் என்றும், பிறிதோர் இடத்தில் ஒன்றியம் என்றும், வேறோர் இடத்தில் இந்தியத் துணைக் கண்டம் என்றும், இன்னும் ஓர் இடத்தில் இந்தியா ஒரு சிறைக்கூடம் என்றுமாகப் பலவாறாக அடையாளப்படுத்துகின்றனர்.

அவ்வகையில் இந்தியாவைச் சிறைக்கூடம் என்பவர்கள், சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தேசிய இனங்களை விடுவிப்பதற்கு என்ன முயற்சி செய்திருக்கிறார்கள்? என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்?

இந்தியப் புரட்சி என்கிற நிலையில் காத்திருப்பவர்கள், அந்த இந்தியப் புரட்சியை ஆற்றுவதற்கு சிறைப்படுத்தப்பட்டிருக்கும் பல்வேறு தேசிய இனங்களை ஒருங்கிணைத்திட என்ன அரசியல் திட்டம் கொண்டிருக்கிறார்கள் என விளக்கியதும் இல்லை நடைமுறைப்படுத்துகிற முயற்சியையும் கொண்டிருக்க முடியவில்லை.

மக்கள் அதிகாரம் என்கிற பெயரில் அவர்கள் வைத்த 2015 ஆம் ஆண்டு அறிக்கையில்,

*நெருக்கடி முற்றி உளுத்துப்போய் நொறுங்கி வீழும் நிலையில் உள்ள இந்தக் கட்டமைப்புக்குள் தனி ஒரு பிரச்சனைக்கும் சிக்கல்களுக்கும்கூடத் தீர்வு இல்லை... இந்தக் கட்டமைப்பைத் தாக்கித் தகர்த்துவிட்டுப் புதியதொரு கட்டமைப்பைக் கட்டுவதுதான் ஒரே வழி. விடிவுக்கான வழி என்று யாரெல்லாம் ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களை ஓர் ஐக்கிய முன்னணிக்குள் திரட்டிப் போராடுவது உடனடிக் கடமையாகிறது. அவர்கள் தனிநபர்களாக இருக்கலாம்; அமைப்பாகவும் இணையலாம்; சாதி, மதவாத அமைப்புகள், ஏகாதிபத்தியத் தொண்டூழியக் குழுக்களைக் கட்டாயம் இதில் சேர்க்க முடியாது. உறுப்பினர்களாக இணையும் தனி நபர்கள் ஓர் ஓட்டுச்சீட்டு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்களும் சரி, உறுப்பினர்களாகச் சேரும் அமைப்புகளும் சரி, உள்ளூராட்சி சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் ஓட்டுப் போடுபவர்களாக, தேர்தல் வேலை செய்பவர்களாக இருக்கக்கூடாது... நமது அமைப்புகளைச் சேராத ஆனால் இவ்வாறு விசுவாசமாக இருந்து முன்னோடியாக அவர்கள் தலைமையின் கீழ் நாம் வேலை செய்யவும் வேண்டும். நாம்தாம் நமது அமைப்புகள்தாம் தலைமை தாங்க வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பது குறுங்குழுவாதமாகும்"*

என்றெல்லாம் அவர்களின் (2015இல் வெளியிடப்பட்ட **கட்டமைப்பு நெருக்கடியும் புதிய செயல் தந்திரமும்** எனும் அறிக்கை) நூல் விரிவாகச் சொல்லுகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் கடந்த காலங்களில் எந்த அளவு கோட்பாட்டளவிலும், அமைப்பியல் அளவிலும் இறுக்கம் காட்டினார்களோ, அந்த அளவு தளர்வுபடுத்திக்கொண்டு முடி வெடுத்திருக்கிறார்கள் என்பதே.

ஆனால் புதியதொரு கட்டமைப்பை மக்கள் அதிகாரத்தின்மீது படைக்கப்போவதாகப் பறைசாற்றுகிற இவர்களின் கருத்து ஒருவகை யில் வரவேற்புக்குரியதே. ஆனாலும், அவ்வதிகாரத்தை நிறுவப் போகும் இடம் எது என்பது பற்றித் தங்கள் ஆவணங்களில் அவர்கள் குறிப்பிடவில்லை.

புதிய கட்டமைப்பை இந்திய அளவில் கட்டப்போகின்றனரா அல்லது தமிழக அளவிலா என்பது குறித்த எந்தவிளக்கமும் அவர்களின் அறிக்கைக்குள் விளக்கப்படுத்தப்படவில்லை.

நமது நாடு, நம் நாடு என இந்தியாவையே இவர்கள் குறிப்பிட்டுக் கொள்வதால், இந்திய அளவில்தான் மக்கள் அதிகாரத்தைக் கொண்டு புதியக் கட்டமைப்பைக் கட்டத் திட்டமிடுவதாக உணரலாம்.

இந்தியாவில் தமிழகம் தவிர்த்து வேறெங்கும் கட்சியின் சுவடில்லாத இவர்கள் எப்படி இந்திய அளவில் புதிய கட்டமைப்பைக் கட்டப் போகிறார்கள் என்றோ, இந்திய அளவில் உள்ள முரண்பாடுகொண்ட பல்வேறு தேசிய இனங்களின் அடிமை முறைகளைத் தகர்த்தெறிந்து அவற்றை எழுச்சி கொள்ளவைப்பதற்காக மக்கள் அதிகாரம் வழி என்ன வகையில் அரசியலாகவும் நடைமுறையாகவும் திட்டமிட்டிருக்கிறார்கள் என்றும், இவர்களின் நூல்களில் ஆய்வுசெய்யவுமில்லை, குறிப்பிடவுமில்லை.

இவர்களின் மக்கள் அதிகாரம் அமைப்பிற்கான கொள்கை அறிக்கை நூலுள்,

*எல்லாச் சிக்கல்களுக்குமான, கட்டமைப்பு நெருக்கடிக்குமான தீர்வின் தொடக்கமாக மக்களே அதிகாரத்தைக் கைப்பற்றும் இயக்கமாக மக்கள் அதிகாரம் என்ற ஒரு பொது அரசியல் அரங்கத்தை, ஒரு பொது அரசியல் அமைப்பைக் கட்டி, அதற்கான முழக்கங்களை வகுத்து, புதிய, சரியான அவசியமான, மைய இயக்கத்தை முன்னெடுக்க வேண்டும்*

என்று கூறும் இவர்கள், கட்டி இருக்கிற மக்கள் அதிகாரம் நிலம் சார்ந்ததாக, நாடு அல்லது தேசம் சார்ந்ததாக அல்லாமல், எங்கு என்ற விளக்கமில்லாமல் இருப்பதை அவர்கள் விளக்கப்படுத்தியாக வேண்டும்.

இந்தியா என்கிற வகையில் ஒரு குருட்டுத் தேசபக்தியை இந்திய அரசு உருவாக்குவதாகக் குறைபடுகிற இவர்கள், தங்களளவில் நம்பிக்கை வைத்திருக்கும் நமது நாடு, நமது இந்திய நாடு, இந்திய மக்கள் அதிகாரம் என்ற நம்பிக்கைக்கெல்லாம் பொருள் என்ன?

ஒரு புறத்தில்,

*"இந்தியாவின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலவும் பருண்மையான நிலைமைகளோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் பருண்மையான நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும்."*

என்றும்,

*"இ.பொ.க. (மா.இலெ.) மாநில அமைப்புக்குழு தனது அரசியல் முழக்கங்களை முன்வைத்து, தமிழ்நாடு அளவில் மையப்படுத்தப்பட்ட வகையில் மக்கள் திரள் அரசியல் இயக்கங்களையும் போராட்டங்களையும் நடத்தி வருகின்றோம்"*

என்றும் தங்களின் கட்சிபற்றியதான நிலையை (2011இல் வெளியிட்ட சுருக்கமான அறிமுகமும் அடிப்படை நிலைப்பாடுகளும் எனும் நூலில்) வெளியிட்டுள்ளனர்.

இந்தியா ஒன்றுபோன்றதான நிலைமைகளைக் கொண்டதன்று என்றும், நாங்கள் இந்தியா முழுக்க வேலை செய்யவில்லை என்றும் ஒப்புக்கொள்ளுகிற இவர்கள் எப்படி இந்தியா முழுமைக்குமான அரசியல் செயல்திட்ட அறிக்கையைத் தீர்மானிக்கவும் முன்வைக்கவும் முடியும்.

நாடு, தேசம், அரசியல் அதிகார நில எல்லை என்பதில் பருண்மையான அரசியல் தெளிவு பெற மறுக்கிற இவர்களால், தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாய் அடையாளப்படுத்திக் கொண் டிருக்கிற இவர்கள் சொல்லுகிற இந்திய நாட்டிற்குள் எப்படி மக்கள் அதிகாரத்தை நிறுவ முடியும். அப்படி இல்லை, தமிழக அளவில்தான் மக்கள் அதிகாரத்தைப் புரட்சிவழி நிறுவப் போகிறோம் எனில், இந்தியப் பொதுவுடைமைக் கட்சி - என்ற அடையாளமும், வரையறையும் எதற்காக? அது எப்படி இயங்கியல்வழி சரியானதாக ஆகும்.

தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி என்று தமிழக அளவில் கட்சியைக் கட்டி, தமிழ்நாட்டு அளவில் குமுக அரசியல் வரையறை செய்து மக்கள் அதிகாரத்தை நிறுவ திட்டமிட வேண்டியதுதானே. ஆக, இவை பற்றியெல்லாம் விளக்க வேண்டுவதும், பிறர் அவர்களை விளக்கச் சொல்லிக் கேட்க வேண்டுவதும் கடமையாகின்றது.

## மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு

இந்த நிலை விளக்கங்களிலிருந்து இப்போது நாம் முன்னெடுத்திருக்கிற மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு குறித்தான கருத்து விளக்கத்திற்கு வரலாம்.

மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு என்பது தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் வெகுமக்கள் பரப்பலுக்கான ஒரு முழக்கம்.

அதுதான் முழுமையான ஒரே தீர்வுக்குரிய முழக்கம் என்று நாம் எங்கும் சொல்லவில்லை.

மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பை முன்னிறுத்திப் பரப்புவதன் வழி மாநில உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்க்க வேண்டும் என்கிற கருத்தை வெகுமக்களிடையே ஊன்றிட முடியும்.

மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை எதிர்க்கும் போது, மாநிலங்களுக்கு முற்றதிகாரங்கள் தேவை என்பது இயல்பாகவே கருத்தாக மாறுகிறது..

மாநிலங்களின் முற்றதிகாரத் தேவை என்பது, தமிழ்த் தேசிய விடுதலை அரசியலுக்கு வழித்தடமாகவும் அமைகிறது.

மாறாகத் தமிழ்த் தேசிய விடுதலை உரிமை அரசியலை மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்போடு நிறுத்துவது என்கிற வகையில் புரிந்து கொள்வதும் கருத்தறிவிப்பதும், கொள்கை இலக்கு அரசியலை வெகு மக்கள் அரசியலாக மாற்றுகிற முழக்கங்கள் பற்றித் தெரியாத தன்மையையே காட்டும்..

நாம் அடைய வேண்டிய இலக்கு நோக்கிப் பல முழக்கங்களை பல கோணங்களில் முன்னிறுத்துகிறோம்..

முன்வைக்கப்பெறும் ஒரு முழக்கமே நம் இலக்காகி விடாது..

அதேபோது, ஒவ்வொரு முழக்கமும் இலக்கிற்கு எதிரானதும் அன்று.. இலக்கை நோக்கிச் செல்வதற்கு ஒவ்வொரு முழக்கமும் ஒவ்வொரு வகையில் முதன்மையானதே.

ஒரே ஒரு முழக்கத்தை மட்டும் வைத்துக்கொண்டு, இவ்வளவுதானா உங்களின் இலக்கு என்பது அரைகுறை பார்வையுடையதே.

இந்நிலையில்,

தமிழக மக்கள் முன்னணி முன் வைத்திருக்கிற மாநில உரிமைப் பறிப்பு எதிர்ப்பு என்பது என்ன வகையில் எல்லாம் மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன என்பதை விளக்கப்படுத்துகிறது..

அத்தகைய மாநில உரிமைப் பறிப்பை எதிர்த்தான மாநில உரிமை மீட்பு அளவில் தமிழ்நாட்டின் உரிமை மீட்புக்கான அடையாளமாக நாம் ஏற்கனவே முன் வைத்திருக்கிற முற்றதிகாரத் தமிழ்நாட்டின் வடிவம் எத்தகையது என்பதைப் பல நிலைகளில் விளக்கி இருக்கிறோம்..

உரிமைகள் பறிப்பு எதிர்ப்பு என்பது உரிமைக்குரிய தமிழ்நாட்டை நிறுவுவதற்கான வழித்தடத்தை நோக்கியதே..

முற்றதிகாரத் தமிழ்நாடு என்பது தன்மை அடிப்படையில் கீழ்க் காணும் நிலையில் இருக்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்..

எனவே அவற்றையெல்லாம் முழக்கங்களாக ஒவ்வொரு நிலையிலும் முன்னெடுத்து விளக்கப்படுத்துவோம்.

1. தமிழகத்தின் பல்கலைக் கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், கல்வி மொழியியல் தொடர்புடைய இயக்ககங்கள், தொல்லியல் தொடர்புடைய துறைகள் என அனைத்து அதிகாரங்களும், அந்தந்தத் துறைகளுக்கான பணியாளர்கள் அமர்த்த அதிகாரங்களும் தமிழக அரசிடமே இருத்தல் வேண்டும்.

2. தங்களின் தேசிய இனத்தைத் 'தமிழர்' என்றே பதிவு செய்வதுடன் தமிழ்நாட்டின் செய்தித்தாள் உள்ளிட்ட இதழியல் துறை, தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகத்துறை, திரைப்படங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் அதிகார அலுவல்களின் அதிகார வரம்பும் தமிழக அரசிடமே இருத்தல் வேண்டும்.

3. தமிழ்நாட்டின் பள்ளி, கல்லூரி, பல்கலைக் கல்வித்துறை அனைத்துக்கும் ஒரே வகைக் கல்வி முறையாக ஆக்கப்பட்டு அதன் பாடத்திட்டங்கள் வகைப்படுத்தும் முழு அதிகாரத்தையும், ஆளுமை அதிகாரத்தையும் கொண்ட அளவிலேயே தமிழ்நாடு அரசின் முழு பொறுப்பின்கீழ் அனைத்தும் தாய்மொழி தமிழிலேயே வரவேண்டும்.

4. நெல், கரும்பு உள்ளிட்ட அனைத்து வேளாண் பொருள்களுக் குமான (பால் உள்ளிட்ட பொருள்களுக்கு) விலை உறுதிப்பாட்டை (நிர்ணயத்தை)யும் தமிழக உழவர்களின் முழு ஒப்புதலோடு தமிழ்நாடு அரசே செய்தல் வேண்டும்.

5. நெய்வேலி நிலக்கரி, நரிமணம் கன்னெய் (பெட்ரோல்), சேலம் இரும்பு உள்ளிட்ட தமிழ்நாட்டுக் கனிமவளங்களின் (எடுத்தல், உடைமை, பகிர்வு அனைத்து அதிகாரங்களும் தமிழ்நாட்டு அரசிடமே இருத்தல் வேண்டும்.

6. தமிழ்நாட்டிற்குள் செயல்படுகின்ற தொடர்வண்டித்துறை, வானூர்தி, கப்பல் போக்குவரத்து அனைத்தும் தமிழ்நாடு அரசின் அதிகாரத் திற்கு உட்பட்டே இயங்குதலும், ஆளுகைக்குள்ளாகவே இருக்கும்.

7. தமிழ்நாட்டின் நெடுஞ்சாலைத்துறை, விற்பனை வரிகள், வருமான வரிகள், தொழில் வரிகள் உள்ளிட்ட எந்த வரிகளானாலும் அவற்றை நீக்குவதும், அளவிடுவதும், பெறுவதுமான உரிமைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசுக்கே இருத்தல் வேண்டும்.

8. நில உரிமை, நீர் உரிமை, கான் (வன) உரிமை என அனைத்தும் தமிழ்நாட்டின் பொறுப்பினதாகவே இருத்தல் வேண்டும்.

9. தமிழ்நாட்டில் கங்காணியாகச் செயல்படும் ஆளுநர் என்கிற அதிகார முறை ஒழிக்கப்பட்டு அதன்மூலம் ஆளுநர் மாளிகைகள் என்கிற பெயரில் தமிழகக் கிண்டி மாளிகையிலும் உதகை ஆளுநர் மாளிகையிலும் பாழாய்ச் செலவு செய்யப்பட்டு வருகிற பல ஆயிரம் கோடி ரூபாய் தொகையையும் தமிழ்நாட்டு நலனுக்காகத் தமிழக அரசு பயன்படுத்திடல் வேண்டும்.

10. சுற்றுச் சூழல்களைப் பாழடிக்கும் இயற்கையை அழிக்கும், நீர்நிலை களைப் பாழாக்கும் அனைத்துச் செயல்களையும் தமிழ்நாட்டு அரசு தடைசெய்யும், அவ்வகையில் பாழ் செய்யும், பெரு முதலீட்டு வெளி நாட்டுத் தொழில் நிறுவனங்களை முழுமையாக வெளியேற்றும்; அந் நிறுவனங்களைத் தடைசெய்யும்.

11. தண்ணீரையும் காற்றையும் மாசுபடுத்துகிற அனைத்து நிறுவனங்களும் தடை செய்யப்படுவதுடன், தண்ணீரையும் காற்றையும் முழுமையாகப் பாதுகாப்பதுடன் அவை முழுக்க முழுக்க

இலவய இயற்கைப் பொருள்களாகவே கருதப்படும். அவற்றை விற்பனை செய்கிற நிறுவனங்கள் முழுமையாகத் தடைசெய்யப்படும்.

12. வேளாண்மை புதிய வடிவில் பெரும் கூட்டுறவுப் பண்ணைத் தொழில்களாக மாற்றப்படுவதோடு, விளைச்சல் பொருள்கள் முழுமையையும் பாதுகாக்கிறபடி மொழி மாநில அரசுகளின் பொறுப்பிலேயே கவனிக்கப்படவேண்டும்.

13. தமிழ்நாட்டிற்குரிய நீதித்துறையில் தமிழ்நாட்டின் உயர்நீதிமன்றமே உச்சநீதிமன்றமாக இறுதிச் செய்யப்படும். அதேபோல் தமிழ்நாட்டின் தலைமைச் செயலகம், காவல்துறை உள்ளிட்ட அதிகாரங்கள் உச்சநிலை அதிகார இடங்களாகவும் இறுதி செய்யப்படும்.

14. தமிழ்நாட்டிற்கு என்று தனி இலச்சினையும், தமிழ்த்தாய் வாழ்த்தும் இருப்பதுபோல் தனிக்கொடியும், தனித் தேசப் பாடலும் இருப்பதுடன், தமிழே கல்வி மொழியாக. ஆட்சி மொழியாக, அலுவல் மொழியாக, நீதி மொழியாக, வழிபாட்டு மொழியாக இருந்திடல் வேண்டும்.

15. இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை என்பது தேவையற்றது என்கிற நிலையில் மாநிலங்களின் அவை மட்டுமே போதுமானது. அதனால் நாடாளுமன்றத்திற்கான தேர்தல்கள் மொழித்தேச மாநிலங்களுக்குள் நேரடியாக நடத்தப்படாமல், மொழிவழித் தேசச் சட்டமன்றங்களில் இருந்து தேர்வு செய்யப்படுவோர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதாக இருக்கும்படியான முறையே நடைமுறைப்படுத்தப் படவேண்டும். அவ்வகை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அளவில் இருக்கக்கூடிய எல்லா மொழித் தேசங்களுக்கும் ஒரே எண்ணிக்கையில் இருந்திடல் வேண்டும்.

16. ஒவ்வொரு மொழிவழித் தேசங்களும் தங்களுக்கெனக் காவல்துறை வைத்திருப்பதுபோல், படைத்துறையையும் அதனதன் அதிகாரங்களுக்கு உட்பட்ட நிலையில் வைத்துக் கொள்வதே தேவையானது. அவ்வகை யில் தமிழ்நாட்டிற்கும் படைத்துறை தேவையானதாகிறது. தேவைப்படும் காலத்தில் மட்டுமே அவை ஒன்றிய அளவில் ஒருங்கிணைந்து செயல்படும் சூழல் உருவாக்கப்படும்.

17. அத்தகைய ஒன்றிய அரசுகளின் செயல்பாடுகளுக்கான பொருளியல் செலவுகள் பட்டியலிடப்பட்டு மொழி மாநிலத் தேச அரசுகளிடமிருந்தே ஒன்றிய அரசுக்குக் கேட்டுக் கொடுக்கப்படும்.

18. மாநிலங்களுக்கு இடைப்பட்ட சிக்கல்கள் அந்தந்த மொழிவழித் தேச மாநில அரசுகளால் அமைக்கப்படும் குழுக்களுக்கு இடையேயான பேச்சுரையின் மூலமே தீர்க்கப்பட வேண்டும். இடையில் குரங்கு அப்பம் பிரித்த கதையாய் இதுவரையில் நடந்து வரும் இந்திய ஒன்றிய அரசின் தலையீடுகள் முற்றும் முழுமையாய் நீக்கப்படும்.

19. வெளிநாடுகளுக்கு இடைப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி வணிகங்களை மொழி மாநில அரசுகளே முடிவுசெய்தல் வேண்டும். அதில் ஒன்றிய அரசின் தலையீடு கூடாது.

20. மொழிவழித் தேச மாநில அரசுகளின் ஒப்புதல் இல்லாமல் பிற தேச. பிற நாட்டுத் தொழிலாளர்களையும், தொழில்களையும் அந்தந்த மொழித் தேச மாநிலங்களுக்குள் கொண்டுவருதல் கூடாது.

21. அந்தந்த மொழிவழித் தேசங்களுக்கான தேர்தல்களை, அந்தந்த மொழித் தேச மாநிலத் தேர்தல் ஆணையங்களே நடத்திடல் வேண்டும். அதில் ஒன்றிய அரசு தலையிடுதல் கூடாது.

22. என்ன வகைக் காரணங்களுக்காகவும், யாரும் அந்தந்த மொழிவழித் தேச அரசுகளின் இசைவு பெற்று உலகம் முழுக்கச் சென்று வரலாம். அதற்கான அனைத்து வகைத் துணைகளையும் மொழிவழித் தேச அரசுகளே செய்யும்.

23. மக்கள் மற்றும் உலக நலன்களில் அக்கறை செலுத்தும் அனைத்து அறிவியல் ஆய்வுகளையும் மொழிவழித் தேசிய மாநில அரசுகளே ஊக்கப்படுத்தி வளர்க்கும், மக்கள் மற்றும் உலக வளத்தைப் பாழாக்குகிற அணுகுண்டு வெடிப்பு உள்ளிட்ட எந்த அறிவியல் ஆய்வுகளையும் மொழிவழித் தேச மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளாது.

24. சாதிவெறியை அடிப்படையாகக் கொண்ட சாதித் சங்கங்களின் செயற்பாடுகள் அனைத்தையும் மொழித் தேச மாநில அரசுகள் தடை செய்யும். ஆணவப் படுகொலைகள், சாதியின் பெயரால் கலவரங்கள் உடைமைகளைப் பாழாக்குவது உள்ளிட்ட அனைத்துச் செயல்பாடுகளையும் மிகக் கடுமையாக மொழி மாநில அரசுகள் ஒடுக்கிடவே செய்யும்.

25. மூடநம்பிக்கையை முழுமையாய் நீக்குவதற்கான அறிவு வளர்ச்சிக்கு வழி அமைத்துத் தருவதுடன் கடவுள், மத வழிப்பட்ட கருத்துகளில் ஒருவரின் தனிப்பட்ட முடிவுகளில் மொழிவழித் தேச மாநில அரசுகள் தலையிடாது. அனைத்து சமயங்களின் வழிபாட்டு இடங்களையும் தூய்மையாகவும், ஒழுங்காகவும் அரசே பாதுகாக்கும். வழிபாடுகள் அவரவர் வீடுகளிலும், வழிபாட்டு இடங்களிலும் நடத்த முழுமையாய் அரசு இசைந்திடும். சாலைகளிலும் பொது இடங்களிலும் வழிபாடுகளையும் சமயப் பரப்பல்களையும் செய்ய அரசு இசையாது, தடை செய்யும்.

ஆனால், இன்றைய நிலையில் மாநிலங்கள் என்றால் என்ன? அதன் அரசியல் அதிகாரங்கள் எவை?, இந்திய அரசு என்றால் என்ன? அதற்கு என்னென்ன அதிகாரங்கள் எல்லாம் உள்ளன? என்பது பற்றியான எந்த நிலைகளும் தெரியாத சூழலில் குமுகம் உள்ளாக்கப்பட்டு இருக்கிறது.

ஒவ்வொரு மாநில மக்களின் மொழி உரிமை, இன அடையாள உரிமை, அரசியல் உரிமை, பொருளியல் உரிமை, கனிம உரிமை, கடல் உரிமை என அனைத்தையும் பறித்துச் சூறையாடுகிறது இந்திய அரசு.

வெள்ளையனை விரட்டிவிட்டு அம்பானி, அதானி உள்ளிட்ட மார்வாரி பெருமுதலாளியர்களும், பார்ப்பனிய அதிகார வெறியர்களும் சேர்ந்து கொண்டு அதிகார வெறியாட்டம் போடுகின்றனர்.

பல்லாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்த தமிழ் இனத்தையும் பிற மொழியினங்களையும் அடையாளம் தெரியாமல் நசுக்கி ஆரியப் பார்ப்பனிய அதிகாரத்தை நிலைநாட்டும் திமிரோடு இந்திய அரசு செயல்படுகிறது.

எனவே, ஒவ்வொரு மாநிலமும் முதலில் தங்களின் மாநில உரிமைகளுக்காகப் போராட வேண்டியிருக்கிறது. நம் உரிமைகள் வாழ்வியல் எவ்வாறெல்லாம் பறிக்கப்பட்டுள்ளன எனத் தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையாகப் பரப்பல் செய்ய வேண்டியிருக்கிறது.

அத்தகைய பரப்பல் முயற்சியே இந்த மாநாடு. எனவே பறிபோன மாநில உரிமைகளை மீட்க வேண்டுமான கருத்தைத் தமிழ்நாடு எங்கும் பரப்புவோம். அதன் வழி மாநில உரிமைகளை மீட்டு முற்றதிகாரத் தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## எது தேசத் துரோகம்?

மண்ணும் கல்லும் மட்டுமா தேசம் ?
மனிதக் கூட்டம் வாழவே தேசம் !
புண்ணில் அம்பைப் பாய்ச்சலா நேசம் ?
பொய்யும் புரட்டும் பேசலால் கூசும் !
உன்னை மதியார் ஒடுக்கவா ஆட்சி ?
உய்யும் வழியைக் காட்டினால் மாட்சி!
சொன்னால் தேசத் துரோகமா யோசி !
தொல்லை தந்தால் ஊதுவாய் தூசி !

நன்மை கேட்டால் தீமையா பரிசு ?
நையப் புடைத்தல் நயன்மையா திருத்து !
உண்மை வெல்ல ஓரிடம் திரளு !
உன்னால் முடியும் என்பதை உணர்த்து !
எண்ணம் பரவின் எங்கணும் எழுச்சி !
இதற்குப் பின்தான் எடுப்பாம் ஓட்டம் !
எண்கள் கணக்கில் எண்டிசை நீதான்
இதற்குப் பின்னும் எவருனை வெல்வார் ?

ஆற்றல்

# தமிழ்நாடு விடுதலை கோருகிறவர்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களா? நீதிபதி பரத சக்கரவர்த்தி வரலாறும் அரசியல் அறிவியலும் அறிந்துதான் பேசுகிறாரா?

- **பேராசிரியர் த.செயராமன்**

தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டி. பரத சக்கரவர்த்தி 2026 சூன் 29 அன்று, ஒரு தேசத்துரோக வழக்கை இரத்து செய்து தீர்ப்பளித்தபோது நீதிமன்றக் கருத்துரையாகக் கூறிய பதிவு தமிழ் மொழி- இன- நாட்டு உணர்வாளர்களிடையே ஒரு சர்ச்சையை உருவாக்கி இருக்கிறது.

ஆனால், தமிழ்ச் சமூகம் அவர் கூறியதையோ, அதன் பொருளையோ, எது பற்றியும் கவலைப்படாமல் வழக்கம் போலவே மயக்கத்தில் இருக்கிறது. நீதிபதி பரத சக்கரவர்த்தி கூறிய கருத்து நீதிமன்றத் தீர்ப்பு அல்ல; தீர்ப்பை வழங்கும்போது அவர் கூறிய நீதிமன்றக் கருத்துரை தான், குறிப்பிட்ட வழக்கில் தேசத்துரோக குற்றம் பொருந்துமா என்பதை ஆராய்ந்தபோது கூறப்பட்ட கருத்து அது.

**நூல் எழுதியதற்குத் தேச விரோத வழக்கு!**

2014 இல் சென்னை வடபழனியில் இளங்கோவன் என்பவர் எழுதிய தமிழ்த் தேசிய தலைவர் தமிழரசனின் வாழ்வும் அறமும் என்ற நூல் வெளியிடப்பட்டது. தமிழரசன் தமிழகம் தனியாகப் பிரிய வேண்டும் என்றும், பிரிவினைக்காகக் கொரில்லாப் போர் முறை கையாளப்பட வேண்டும் என்றும் பேசியதாக இந்நூல் குறிப்பிடுகிறது. 1967 இல் தமிழரசன் கோவையில் தனித்தமிழ்நாடு குறித்து எந்தக் கருத்துப் பதிவுகளோ, நடவடிக்கைகளோ செய்யவில்லை. இப் புத்தகம் தவறான ஒரு செய்தியைப் பதிவிட்டுள்ளது. இந்த புத்தகத்தை வெளியிட்ட கழகம் பதிப்பகத்தை நடத்திய இளங்கோவன் இப்போது இறந்து விட்டார். சென்னை கலைஞர் நகரைச் சேர்ந்த கீ.ரா, சாலிகிராமத்தைச் சேர்ந்த தமிழ் பாலா ஆகியோர் மீது போலீசார் தேசத் துரோக வழக்குப் பதிவு செய்தனர். சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தது. இந்த வழக்கை இரத்து செய்யும்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் கீ. ரா. மற்றும் தமிழ் பாலா ஆகியோர் மனு தாக்கல் செய்தனர்.

நீதிபதி டி. பரத சக்கரவர்த்தி 2026 சூன் 29 அன்று தன் தீர்ப்பை வழங்கினார். நீதிபதி டி. பரத சக்கரவர்த்தி,

> *'1967இல் தமிழரசன் பேச்சு இந்திய அரசுக்கு எதிராக வெறுப்பையோ அவமதிப்பையோ ஏற்படுத்தி இருக்கலாம்; ஆனால் இன்றைய சூழலில் இந்தியா ஒரு தேசமாக உள்ளத்தாலும் உயிராலும் ஒருங்கிணைந்து கிடக்கிறது. இன்றைய சூழலில் யாராவது தமிழகம் தனி நாடாகப் பிரிய வேண்டும் என்று பேசினால் அந்த நபருக்கு மனநலம் சரியில்லை என்றுதான் பொதுமக்கள் கருதுவர்'*

என்று தம் கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். இந்த நூல் பேசக்கூடிய செய்தி பொதுமக்கள் இடையே எந்தவிதமான வெறுப்பையும் ஏற்படுத்தாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அந்தப் புத்தகத்தில் தற்காலத்தில் பிரிவினைக்கான அழைப்பு எதுவும் இல்லை; பல தசாப்தங்களுக்கு முன் தமிழரசன் கூறியதை மட்டுமே அது பதிவு செய்துள்ளது. நடந்ததை வெறும் பதிவு செய்தது வெறுப்பைத் தூண்டும் முயற்சியாகாது என்பதால் தேசத் துரோக வழக்கை இரத்து செய்வதாக நீதிபதி கூறி இருக்கிறார்.

நீதிபதி பரத சக்கரவர்த்தி தமிழகத்தைத் தனி நாடாகப் பிரிக்க வேண்டும் என்ற கருத்துத் தெரிவிப்பவர்களை மனநலப் பிரச்சனை உள்ளவர்களாகவே மக்கள் பார்ப்பார்கள் என்று கருத்து கூறியிருக்கிறார்.

("Talk of separate Tamilnadu today would be seen as mental health issue not sedition; such a comment may at best cause annoyance in the present social context and cannot be considered as inciding hatred." )

நீதிபதி கூறுவது:

'1967 இல் தமிழரசன் காலத்தில் தமிழக விடுதலை அமைப்பு உருவாக்கிய போது அத்தகைய பேச்சு அல்லது வெளியீடு வெறுப்பை உருவாக்கி இருக்கலாம்; ஆனால் இன்றைய சூழலில் இந்தியா என்ற ஒரு தேசம் இதயத்தாலும் உயிராலும் ஒருங்கிணைக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. முன்பு நடந்ததைப் பதிவு செய்வது என்பது வெறுப்பைத் தூண்டுவது ஆகாது' என்கிறார்.

இந்த நூல் அரசுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டுவதாக எழுதப்படவில்லை; ஆகவே இது தேசத் துரோகம் என்ற வகையில் வராது என்று நீதிபதி கூறியிருக்கிறார். இதுபோன்ற பிரச்சனைகளைத் தற்போது நிலவும் சமூகச் சூழலிலும், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்திற்கும் ஏற்பப் பரிசீலிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது என்றும் நீதிபதி குறிப்பிடுகிறார். 1967 இல் இத்தகைய பதிவுகள் அரசுக்கு எதிராக வெறுப்பை உருவாக்கி இருக்கலாம் ஆனால் இப்போது அந்தச் சூழல் இல்லை என்று நீதிபதி கருதுகிறார். ஒரு பிரச்சனையை அந்தச் "சமூகச் சூழல் மற்றும் நாம் வாழும் காலம் இவற்றின் அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும்" என்று கூறியிருக்கிறார்.

அவர் தேசத்துரோக வழக்கைத் தள்ளுபடி செய்தது மிகச் சரியானது. ஒரு நூலில் எழுதியதாலே அது தேசத் துரோகம் ஆகிவிடாது என்பதை இந்த வழக்கு தெளிவுபடுத்தி இருக்கிறது. இவற்றை நாம் வரவேற்கலாம்.

**தமிழ்த்தேசியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய செய்தி:**

நீதிபதி கூறி இருப்பது அவருடைய மதிப்பீடு. அதில் தமிழ்த் தேசியர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய செய்தி இருக்கிறது. அவருடைய கருத்தின்படி இந்தியத் தேசியம் என்பது மக்களுடைய உள்ளத்திலும் உயிரிலும் கலந்திருக்கிறது; தமிழ்நாடு பிரிவினைக் கோரிக்கை என்பது மக்களால் குறிப்பிட்ட நபரின் உளநிலைப் பாதிப்பாகத்தான் மக்கள் கருதுவார்கள் என்பது அவருடைய கருத்து. மக்கள் அவ்வாறு கருதுகிறார்களோ இல்லையோ நீதிபதி பரத சக்கரவர்த்தி அவ்வாறு தான் மிக எளிதாக கருதுகிறார். நீதிபதியின் கருத்துப் பதிவு தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கை குறித்த அவருடைய இளக்காரமான மதிப்பீட்டைக் காட்டுகிறது.

தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கை மக்கள் மயமாகவில்லை என்பது உண்மை. தமிழ்நாடு விடுதலைக் கருத்தியல் மக்கள் மயமாகி இருந்தால் நீதிபதி இவ்வாறு ஒரு கருத்தைப் பதிவு செய்திருக்க மாட்டார். இப்போது நிலை இன்னமும் மோசமான நிலைநோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. தமிழ்நாடு விடுதலையை இலக்காகக் கொண்ட தமிழ்த் தேசிய கருத்தியல் முடமாக்கப்பட்டு, பிழைப்புவாதத் தேர்தல் அரசியலுக்குள் சிறை வைக்கும் முயற்சிகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசியம் என்ற சொல்லைப்

பிழைப்புவாதிகளும், பித்தலாட்டக்காரர்களும் களவாடித் தேர்தல் அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் வலிமையான அரசியல் சக்திகள் இந்தியத்துடன் இணக்க அரசியலைக் கைக்கொண்டு விட்டன. ஒன்றிய அரசுடன் போர் நடத்த எந்த அரசியல் கட்சியும் தயார் இல்லை. இந்தியம், இந்திய தேசியம் என்ற கருத்தியலை எதிர்க்க எந்த அரசியல் கட்சியும் தயார் இல்லை. இந்திய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காகத் தாங்கள் அரசியல் களத்தில் இருப்பதாக உறுதிமொழி எடுப்பதில் எந்த அரசியல் கட்சிக்கும் தயக்கமில்லை. இந்நிலையில் தமிழ்நாட்டின் இறையாண்மை அரசியலைப் பேசும் அமைப்புகள் வலுக்குன்றியவையாகவே இருக்கின்றன. அதனாலேயே நீதிபதி பரத சக்கரவர்த்தி போன்றவர்களுக்குத் தனித்தமிழ்நாடு கோரிக்கை தமிழர்களின் உளவியல் பாதிப்பாகத் தோன்றுகிறது. பெரியாரின் பெயரைச் சொல்லுகிறவர்கள், அண்ணாவின் வழியில் வந்ததாகக் கூறிக் கொள்கிறவர்கள் இத்தகைய கருத்துப் பதிவைக் கேட்டு கொதிப்படைந்து இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் மௌனமாகக் கடந்து போகிறார்கள்.

### கருத்தறிவித்த நீதிபதி வரலாறும் அரசியல் அறிவியலும் அறிந்துதான் பேசுகிறாரா?

"நாம் வாழும் காலத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் " என்று கூறிவிட்டு, தமிழ்நாடு விடுதலைக் கோரிக்கை குறித்த இளக்காரமான கருத்துகளை அள்ளி வீசுகிற நீதிபதி பரத சக்கரவர்த்தி போன்றவர்கள், நிகழ்காலத்தின் நிகழ்வுப் போக்கைக் கொஞ்சம் திரும்பிப் பார்க்கட்டும்.

வரலாறு திரும்பத் திரும்ப ஒரு செய்தியைக் கூறிக் கொண்டிருக்கிறது. வரலாற்றின் ஓட்டத்தில் தேசியஇனங்கள் உருவாக்கம் பெறுகின்றன. அவை வரலாற்றின் விளைபொருட்கள். அப்படி உருவான தேசிய இனங்கள் இயல்பாகத் தங்கள் விடுதலையை நோக்கி நகரும் ; அதை யாரும் தடுத்துவிட முடியாது. சனநாயக முறையில் பெற முடியாத விடுதலையை ஆயுதப் போராட்டங்கள் மூலம் அந்தத் தேசிய இனம் வென்றெடுக்கும். இதற்கான எத்தனையோ சான்றுகளை வரலாறு பதிவு செய்திருக்கிறது

### சின்னஞ்சிறு நாடுகளும் விடுதலையை இலக்காக முன் வைக்கின்றன!

சமீபத்தில் ஒரு சின்னஞ்சிறு நாடு உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. 2026 பிஃபா உலகக் கோப்பை 'நாக் அவுட்' சுற்றில் (3.7. 2026) அமெரிக்காவின் மியாமியில், அர்சென்டைனாவும் மிகச் சிறிய நாடான கேப் வர்டே தீவுகள் நாடும் மோதின. இந்தப் போட்டியில் கால்பந்தில் வெல்ல முடியாத நாடாக கருதப்படும் அர்சென்டைனா மிகுந்த திணறலுக்கு உட்பட்டு கடினமாகப் போராடி 3- 2 என்ற கோல் கணக்கில் கேப் வர்டே நாட்டைத் தோற்கடித்தது. கேக் வெர்டே ஆற்றலைப் பார்த்து உலகமே வாயைப் பிளந்தது. அட்லாண்டிக் பெருங்கடலில் 10 எரிமலைத் தீவுகளின் கூட்டமைப்பு தான் கேப் வெர்டே என்ற நாடு.

இந்தச் சின்ன நாட்டின் மக்கள் தொகை 5.5 லட்சம் ; தமிழ்நாட்டின் மக்கள் தொகை 8 கோடி தமிழ்நாடு 1, 30, 058 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டைவிட கேப் வெர்டே 32 மடங்கு சிறியது. தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டம் 4086 சதுர கிலோ மீட்டர் பரப்பைக் கொண்டிருக்கிறது; கேப் வெர்டே நாட்டின் பரப்பளவு 4,033 சதுர கிலோமீட்டர். சிவகங்கை மாவட்டத்தை விடவும் கேப் வர்டே சிறியது. 15 - ஆம் நூற்றாண்டு வரை இந்த நாட்டிற்கு வரலாறு கிடையாது. ஏனென்றால் 15- ஆம் நூற்றாண்டு வரை இத்தீவில் மக்கள் வாழ்ந்தது இல்லை. போர்ச்சுகீசியர்கள்தாம் இந்தத் தீவைக் கைக்கொண்டு, அங்கே அடிமைகளைக் குடியமர்த்தினார்கள். ஆப்பிரிக்க - ஐரோப்பிய இனங்களின் கலப்பான கிரியோல் அல்லது முலாட்டோ அங்கே வாழ்கிறார்கள்; 71% கலப்பினத்தவர் ; 28% ஆப்பிரிக்கர்கள்.

தமிழ்நாட்டையும் கேப் வெர்டே தீவுகளையும் ஒப்பிடவே முடியாது. தமிழ்நாடு வரலாற்று , மொழிவள பாரம்பரியத்திலும், பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் பெரியது; நீண்ட வரலாறு கொண்டது; உலகின் மிகப் பழமையான மொழி விளங்கி வந்திருக்கும் நாடு. உலகில் தமிழ்நாட்டை விட மக்கள் தொகையில் அதிகம் கொண்ட நாடுகள் 19 மட்டுமே. உலக நாடுகளில் 175 நாடுகள் தமிழ்நாட்டை விடச் சிறியவை. 97 நாடுகள் தமிழ்நாட்டை விடப் பரப்பளவில் சிறியவை. 1975 சூலை 5 அன்று, கேப் வெர்டே போர்ச்சுகீசியர் ஆட்சியில் இருந்து விடுதலை பெற்றது. 1963 முதல் 1974 வரை 10 ஆண்டுகள் "கூட்டு ஆயுதப் போர் " நடத்தி விடுதலை பெற்றது. போர்ச்சுகீஸ் நாட்டின் பொருளாதாரப் புறக்கணிப்பு, ஒடுக்கு முறை ஆகியவற்றை எதிர்த்து கேப் வெர்டே விடுதலை பெற்றது. மொழி, இனம், பொருளாதாரம் இவற்றின் அடிப்படையில் எங்கு பாரபட்சம் இருந்தாலும், பாதிக்கப்படும் இனம் விடுதலை கோரிப் போராடும் என்பதற்கு கேப் வெர்டே என்ற சின்னஞ்சிறு நாட்டின் விடுதலைப் போராட்டம் ஓர் உதாரணம். அது விடுதலை பெற்று 50 ஆண்டுகள் தான் ஆகின்றன.

### உலகநாடுகள் விடுதலையை வென்றெடுத்ததற்கும் உளவியல் பாதிப்புதான் காரணமா ?

1914 முதல் 1918 வரை முதல் உலகப்போர் நடைபெற்றது. அப்போது ஐரோப்பாவில் இருந்த நாடுகள் 26 மட்டுமே. முதல் உலகப் போருக்கும் இரண்டாம் உலகப் போருக்கும் (1939- 45) இடையில் ஐரோப்பாவில் இருந்த நாடுகள் 33. இன்று ஐரோப்பாவில் இருக்கும் நாடுகள் 50 . இத்தனைத் தேசங்கள் எங்கிருந்து முளைத்தன? ஒரு பேரரசிலிருந்து அல்லது வல்லாதிக்க நாட்டில் இருந்து இத் தேசங்கள் விடுதலை அடைந்ததற்கு ஐரோப்பிய மக்களின் மனநிலை பாதிப்புதான் காரணமா? ஆஸ்திரியா, ஹங்கேரி என்ற ஒரு நாடு ஆஸ்திரியா தனியாகவும் ஹங்கேரி தனியாகவும் பிரிந்ததற்குக் கூட மனநிலை பாதிப்புதான் காரணமா?

1993 சனவரி 1 அன்று, செக்கோஸ்லோவேக்கியா (Czechoslovakia) எந்தப் போரும் இல்லாமல், நாடு பிரிந்து இரண்டு புதிய நாடுகள், செக் குடியரசு (Czech Republic / Czechia), ஸ்லோவாக்கியா (Slovakia) உருவாயின.

எந்தவொரு வன்முறையும் இன்றி அமைதியான முறையில் இந்த நாடு பிரிக்கப்பட்டது.

இதனால் இது வரலாற்றில் வெல்வெட் விவாகரத்து (velvet divorce) என்று அழைக்கப்படுகிறது.

"தேநீர் மேசையில் " செக்குகள் தனியாகவும் ஸ்லோவாக்குகள் தனியாகவும் என அமைதியாக இரு நாடுகளாகப் பிரிந்ததற்குக் கூட மனநிலை பாதிப்புதான் காரணமா ?

ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை கோரிப் போராடிய இந்திய துணைக்கண்டத்துத் தலைவர்கள் எல்லாம் கூட மனநோயாளிகள் தானா?

### தேவையின் வெளிப்பாடுதான் விடுதலை கோரிக்கை!

ஒரு தேசியஇனம் இன்னொரு அரசதிகாரத்தின் ஒடுக்குமுறையில் இருந்து விடுபட விரும்பினால், தன் விடுதலைப் போராட்டத்தை நடத்தி, இறையாண்மை உள்ள தேசமாக மாறுகிறது. ஒடுக்கு முறையின் வலி அந்தத் தேவையை ஒரு தேசிய இனத்திற்கு உணர்த்துகிறது. இந்திய வல்லாதிக்கத்தால் சூறையாடப்படும் உள்நாட்டு காலனியாக ( Internal Colony) தமிழ்நாடு நீண்ட காலமாக இந்தியாவில் இருந்து வருகிறது. அந்தத் தேவையின் வெளிப்பாடுதான் தமிழ்நாட்டின் விடுதலைக்குரலாகக் கடந்த ஒரு நூற்றாண்டாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை பெரியார் தொடங்கி அறிஞர் அண்ணா, பாவலரேறு பெருஞ்சித்திரனார், புலவர் கலிய பெருமாள் தோழர் தமிழரசன், பல மார்க்சிய இலெனினிய அமைப்பினர் எனப் பலராலும் பல்வேறு அமைப்புகளாலும் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது.

**மூளைச்சலவைக்கு உள்ளானவர்களுக்கு இந்தியாவே சொர்க்க பூமி!**

**அவர்களுக்குத் தேசியஇன விடுதலைக் கோரிக்கை உளநிலைப் பிரச்சினை!**

**மூளை சலவைக்கு உள்ளானவர்களுக்குத் தேசிய விடுதலை உளநிலைப் பாதிப்பு பிரச்சனையாகத்தான் தோன்றும்!**

இந்திய ஒருமைப்பாடு குறித்து குழந்தைகளின் முதல் வகுப்பு முதல் தொடர்ந்து திரும்பத் திரும்பக் கற்பிக்கப்பட்டு மூளைச் சலவை செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தியத்தை ஏற்கும் மனநிலை ஊட்டப்பட்டிருக்கிறது. அந்த விளைபொருள்களில் ஒருவர்தான் நீதிபதி பரத சக்கரவர்த்தி. வர்க்க ரீதியாகவும், வருண ரீதியாகவும், மொழியின அடிப்படையிலும், தாங்கள் அமர்ந்திருக்கும் அதிகாரப் பீடங்களின் அடிப்படையிலும், இந்தியம் பலருக்கு இனிமையானது. தங்கள் வாழ்வு வசதியோடும், வளங்களோடும், சகல சுகங்களோடும் அமைந்திருக்குமானால் அதுவே இனிமையானது. அந்த வகையில் இந்தியா பலருக்குப் பிரச்சனையற்றதாக இருக்கிறது.

வசதியான வாழ்க்கையை அடைந்தவர்கள், பெரிய வருமானம் தரும் பதவிகளில் அமர்ந்தவர்கள், இந்தியா முழுவதும் தங்களுக்கான வேலை வாய்ப்புகளை வணிக வாய்ப்புகளைப் பெறுகிறவர்கள், வாழ்வியல் வாய்ப்புகளை வழங்கும் நிலப்பரப்பாக இந்தியாவைக் கருதுகிறவர்கள், இந்தியாவைத் தங்களுக்கான பெரும் சந்தையாகக் கருதுகிறவர்கள், இந்தியா என்பது தங்களுக்குப் பாதுகாப்பானதாக சகல வசதிகளையும் வழங்கக் கூடியதாக உணர்கிறார்கள்.

இவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பான, அனைத்து வசதிகளும் வாய்ப்புகளும் மிக்க வாழ்க்கையை வாழ்கிறார்கள். வறுமை, அடக்குமுறை அல்லது வாழ்வாதார இழப்பை அவர்கள் நேரில் காண்பதே இல்லை. இவர்களுடைய வர்க்க நலன்களும், கையில் இருக்கும் அதிகாரமும், பிறர் அனுபவிக்கும் துன்பங்களை உணரச் செய்வதில்லை.

தற்போதைய சமூக, அரசியல் கட்டமைப்புத் தங்களுக்குச் சாதகமாக இருப்பதால், அவர்கள் மாற்றத்தை விரும்புவதில்லை. இந்திய அதிகார வர்க்கத்தினர், அரசியல் ஆளுமைகள், நீதிபதிகள், பெருமுதலாளிகள், உயர் சாதி வருணத்தவர்கள், கார்ப்பரேட்டுகள் - இவர்களின் இந்தியாவில் எந்தத் துன்பமும் இல்லை. சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், பழங்குடியினர், உழைப்பை நம்பி வாழும் தொழிலாளர்கள், கீழ்நிலைச் சாதியினர், அன்றாடம் வாழ்வியல் வாழ்வாதாரப் பிரச்சனைகளைச் சந்திப்பவர்கள், சமத்துவம் மறுக்கப்பட்ட தேசிய இனங்கள் காணும் இந்தியா மிகவும் துன்பமானது.

ஒவ்வொரு மனிதனின் சொல்லுக்குப் பின்னாலும் அவனுடைய வர்க்கம் ஒளிந்து கொண்டிருக்கிறது. இந்தியாவில் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு மாதச் சம்பளம் ரூ. 2,50,000 மும், இதர நீதிபதிகளுக்கு மாதச் சம்பளம் ரூ. 2,25,000 மும் வழங்கப்படுகிறது. மேலும், நீதிபதிகளுக்கு அகவிலைப்படி, வீட்டு வாடகை, மற்றும் அரசுக் குடியிருப்புகள் போன்ற பிற சலுகைகளும் மற்றும் ஓய்வூதியப் பலன்களும் கிடைக்கின்றன. இவர்களுடைய சமூகத் தகுதி பெரியது. எல்லா இடங்களிலும் எல்லோராலும் மதிக்கப்படுபவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தியா இனிமையானது. தமிழ்நாடு விடுதலை கோரிக்கை என்பது இவர்களைப் பொறுத்தவரை உளநிலை பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைதான்.

இந்தியா சகல வளங்களையும் வாய்ப்புகளையும் சுகங்களையும் வாரி வழங்கி இருக்கும்போது,

தேசிய இன விடுதலை தங்களின் பொருளாதார மற்றும் சமூக ஆதிக்கத்தை குறைத்துவிடுமோ என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கும். இந்தியா என்ற கருத்தியல் பாதுகாப்பில் தங்களுடைய நலனும் இருப்பதாக உணர்கிறவர்கள் தேசிய இன விடுதலையை மறுக்கிறார்கள்.

இது பொது விதி அன்று. தேசியஇன உரிமைக் கோரிக்கையின் நியாயப்பாட்டை உணர்ந்து, அதற்கு ஆதரவு நிலை எடுக்கும் நீதிபதிகளும் உண்டு.

### தமிழ்மக்களின் நிலை என்ன?

கூடுதலாக, ஒரு வருந்தத்தக்க நிலை தமிழ் மக்களிடையே இருக்கிறது. தமிழர்கள் தாங்கள் ஒரு தேசிய இனம் என்பதை உணரவில்லை. தமிழ்த் தேசிய அமைப்புகள் அந்த உணர்வைக்கூட இன்னமும் ஒட்டுமொத்தத் தமிழினத்திடம் உருவாக்கவில்லை. பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும் மாணவ, மாணவியர் கடிவாளம் போட்ட குதிரை போல, தங்கள் பாடப் புத்தகங்களையும், பாடத்திட்டங்களையும்தவிர வேறு எதையும் கற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படவில்லை, அல்லது அனுமதிக்கப்பட வில்லை. இந்தி மொழித் திணிப்பைக்கூட தங்களுக்கு வழங்கப்பட்ட கூடுதல் வாய்ப்பாகக் கருதும்படி இளந்தலைமுறையினர் கற்பிக்கப்பட்டிருக்கின்றனர்.

நீதிபதி பரத சக்கரவர்த்தியின் கருத்து ஒரு சராசரி இந்தியனின் கருத்துதான். தமிழ்நாட்டின் தமிழர்கள் இந்தியர் என்ற மனநிலையில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தமிழ் பேசுவதால் மட்டுமே தமிழர்கள் என்று கருதுகிறார்கள். அதைவிடக் கூடுதலான உணர்வோ புரிதலோ அவர்களுக்கு ஊட்டப்படவில்லை.

இந்தியாவில் இருப்பதால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் இழப்புகள் பற்றிய புரிதல் தமிழ் மக்களுக்கு இல்லை. அரசியல் கட்சிகளும்கூட தாங்கள் தமிழர்கள் என்ற உணர்வோடு அரசியல் நடத்தவில்லை. இந்தியர்கள் என்ற புரிதலோடுதான் திராவிடக் கட்சிகளும் பிற கட்சிகளும் தங்கள் அரசியலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

### நீதிபதியின் இளக்காரமான மதிப்பீட்டுக்குக் கண்டனம்!

தனித்தமிழ்நாடு குறித்துப் பேசுகிறவர்கள் மனநலப் பிரச்சனை உள்ளவர்கள் என்று கருதும் நீதிபதி பரத சக்கரவர்த்திக்குக் கண்டனத்தைப் பதிவு செய்கிறோம்!

அதே நேரம், நீதிபதியின் சொற்கள் ஒரு சராசரி இந்தியனின் மதிப்பீடு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவில் தேசிய இனங்கள் படும் துன்பங்களை, தமிழ்நாடு அடையும் பொருளாதார இழப்புகளை, தமிழ் மொழிக்குத் தரப்பட்டிருக்கும் இரண்டாம் நிலை தகுதியை, தமிழ்நாட்டின் இயற்கை வள, கனிமவளச் சுரண்டலை, தமிழ்நாட்டின் மீதான ஒடுக்குமுறைகளை, ஒட்டுமொத்த இழப்புகளைத் தமிழ் மக்கள் உணரும்படிச் செய்யும் வேலைகள் தமிழ்த்தேசியர்களின் உடனடி வேலைத்திட்டமாக அமைய வேண்டும். இதை உணர்த்தாத வரை தமிழ்நாடு விடுதலை கோரிக்கை என்பது, இந்தியத் தேசியவாதிகளுக்குத் தேசத் துரோகமாகவும், பிரிவினைவாதமாகவும் தோன்றும். இந்தியத்தில் தோய்ந்து ஊறிப்போன தமிழர்களுக்கும்கூட அது மனநலப் பாதிப்பின் வெளிப்பாடாகத்தான் தோன்றும்.

### தமிழ்த்தேசியஇனம் ஒரு தேசியஇனமாக உணரவேண்டும்!

தாங்கள் தமிழ்த்தேசிய இனம் என்பதையும், உலகின் ஏனைய தேசியஇனங்களைப் போல தங்களுக்கும் அத்தனை உரிமைகளும் உண்டு என்பதையும், இந்தி மாநிலத்தவர்கள் மற்றும் குசராத்திகளுக்கு இருக்கக்கூடிய அதே உரிமை தமிழ் மக்களுக்கு இல்லை என்பதையும், சமஸ்கிருதம் இந்தி ஆகிய மொழிகளுக்கு உள்ள தகுதி நிலை தமிழுக்கு வழங்கப்படவில்லை என்பதையும், பொருளாதார ரீதியாகத் தமிழ்நாடு சூறையாடப்படுகிறது என்பதையும், தமிழ்நாட்டின் இயற்கை வளமும் கனிம வளமும் கொள்ளை போகிறது என்பதையும், தமிழ்நாட்டின் நீர் உரிமை, கடல் உரிமை களவாடப்படுகிறது என்பதையும், தமிழ் மக்களுக்கு உடனடியாக உணர்த்தப்பட வேண்டும்.

அடிப்படையில் நாம் யார் என்பதைத் தமிழ் மக்களுக்கு உணர்த்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். நாம் தமிழ்த் தேசிய இனத்தவர் என்பதையும், இந்தியாவில் பல தேசிய இனங்களின் இருப்பையும், அத்தேசிய இடங்களின் சமத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும், தமிழ் மக்களுக்கு உணர்த்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். நீதிபதி பரத சக்கரவர்த்தியின் கருத்து இதைத்தான் நமக்கு உணர்த்துகிறது. கற்றறிந்த ஒரு நீதிபதியின் நிலையே இப்படி இருந்தால், மற்றவர்கள் உளநிலை என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்! காலநிலையையும், களநிலையையும் உணர்ந்து தமிழ்த் தேசியர்கள் தங்கள் செயல்பாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும்! □

# நீட் எதிர்ப்பை வன்முறையால் அடக்கும் பாசிச பார்ப்பனிய பாஜக வைக் கண்டித்து...

## நீதி கேட்கும் கரப்பான் பூச்சிகள்..

கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சிச் சார்பாக புதுதில்லியில் நடைபெறும் போராட்டம் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்கதொரு நிகழ்வாக மாறிவிட்டது. ஒன்றிய அரசின் கொடூரமானத் தாக்குதலுக்கு இடையிலும் மாணவர்களும், இளைஞர்களும் அலை அலையாக ஆர்ப்பரித்து எழுந்தது கண்டு, "இது இரண்டாவது சுதந்திரப் போர் " எனக் குறிப்பிட்டார் தொடர் உண்ணாநோன்பில் இருக்கும் சோனம் வாங்சக். சிலர் இந்தப் போராட்டத்தை ஜாலியன் வாலா பாக் படுகொலையுடன் ஒப்பிடுகின்றனர்.

தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி அமைதியாகப் போராடிய மாணவர்கள் மீது பெல்லட் குண்டுகளால் சுடுவானேன்? ஆணி பொருத்தப்பட்ட லத்தியால் மாணவர்களின் மண்டையைப் பிளப்பானேன்? எனும் கேள்விகளை மக்கள் இன்று நாடு முழுவதும் எழுப்புகின்றனர்.

நீட் தேர்வு என்பது சித்திரவதை செய்யும் ஓர் ஆட்கொல்லியாக மாறி, மாணவர்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள 1,30,000 மருத்துவக் கல்லூரி இடங்களுக்கு இம்முறை 20 இலட்சம் மாணவர்கள் போட்டி போட்டனர். இதற்காக அவர்கள் உழைத்த உழைப்பு சொல்லி மாளாது, இது தவிரப் பயிற்சி வகுப்பு நடத்துபவர்கள் அடிக்கும் கொள்ளைக்கு அளவே இல்லை. நீட் தேர்வுக்காகப் பயிற்சி வகுப்புகள் ஓர் ஆண்டில் அடிக்கும் கொள்ளை 20,000 முதல் 25,,000 கோடி எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இந்த இலாபம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பதுதான் பேரவலம். ஒரு கணக்கீட்டின்படி இந்தியாவில் உயர்கல்விக்காகப் பட்ஜெட்டில் செலவிடப்படும் மொத்தத் தொகையை விட, தனிப் பயிற்சிக்காகப் பெறப்படும் தொகை அதிகம் என்ற செய்தி நம்மை மலைக்க வைக்கிறது.

நீட் பயிற்சி வகுப்புக்காக ஒரு மாணவன் ஓராண்டிற்கு ரூ.70,000 முதல் 2,00,000 ரூபாய் வரை செலவு செய்ய வேண்டி உள்ளது. இதனால் பெரும்பாலும் நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சார்ந்த மாணவனின் பெற்றோர்கள் செய்யும். செலவு அந்தக் குடும்பத்தையே சின்னாபின்னமாக்கிச் சீரழித்து விடுகிறது. இவ்வளவு மன அழுத்தத்திற்குப் பிறகு தேர்வு எழுதச் சென்றால், நீட் தேர்வின் வினாக்கள் கள்ளச் சந்தையில் விற்பனையாகி விடுகிறது. அதன் விளைவாகப் பணக்கார மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடமும் கிடைத்து விடுகிறது. இதற்குப் பிறகும் எவ்விதச் சலனமும் இல்லாமல் ஒன்றிய அரசு மறு தேர்வுக்கான அறிவிப்பை வெளியிடுகிறது. இம்முறை மறுதேர்வு எழுத வேண்டும் என அறிந்த பின், 20 மாணவர்கள் இதுவரை தற்கொலை செய்துள்ளனர். பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் பல்வேறு முறைகளில் 150 - க்கும் மேற்பட்ட தேர்வு மோசடிகள் நடைபெற்றபோதிலும் ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை என்பது எவ்வளவு பெரிய அதிர்ச்சி? இதில் கோடிக்கணக்கான ரூபாய்கள் புழங்குவதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய அநீதிக்கு எதிராக மாணவர்களுக்கு ஏற்பட்ட கடும் கோபத்தின் விளைவுதான் தில்லி ஜந்தர் மந்தரில் வெளிப்பட்டது. இது குறித்துக் கரப்பான் பூச்சி ஜனதாக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அசுதோஷ் ரான்கா நேற்றுக் கூறியது, அப்போராட்டத்தின் வீரியம் எவ்வளவு என்பதைத் தெளிவாக்குகிறது. "புதுதில்லியில் சூலை 20 அன்று நடைபெற்றது ஒரு சிறியமுன்னோட்டம்தான் (only a trial)

இப்போராட்டத்தில் இந்தியா முழுவதும் இன்னும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பங்கேற்க உள்ளனர். சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டங்கள் / தேசியப் புலனாய்வு முகமைச் சட்டங்கள் ( UAPA / NIA ) ஆகியவற்றின் கீழ் நாங்கள் கைது செய்யப்பட்டாலும், அவற்றை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எங்கள் போராட்டத்திற்கு நாங்கள் தரும்

மிகச் சிறிய விலைதான் இந்தச் சிறைவாசம் . அரசுவன்முறை கண்டு நாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை. இந்த அரசைத் தூக்கி எறிவோம்" என அவர் கொந்தளித்துள்ளார்.

மாணவர்களின் இத்தகைய கோபத்தைச் சிறிதளவும் லட்சியம் செய்யாமல், ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திரப் பிரதான், "போராடும் மாணவர்கள், பயங்கரவாதிகள் " ( B team of Terrorist ) என எள்ளி நகையாடுகிறார். நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் எனவும் The Print போன்ற ஊடகங்கள் தெரிவிக்கும் நிலையில், அமைச்சர் இப்படிப் பேசுவது அதிர்ச்சி அளிக்கிறது.

மாணவர்களின் இந்தப் போராட்டம் இப்பொழுது இந்தியாவைத் தாண்டி சர்வதேச அளவில் பேசுபொருளாகி விட்டது. தில்லியில் மாணவர்கள் மீதான ஒன்றிய அரசின் கடும் தாக்குதல் குறித்து அயல்நாட்டு ஊடகங்கள் மிக விரிவான செய்திகளை வெளியிட்டு வருவதை அறிய முடிகிறது. " இந்தியாவில் நடைபெற்ற அரசுக்கு எதிரான போராட்டங்களில் தற்பொழுது நடக்கும் தில்லிப் போராட்டமே மிகவும் பெரியது. வினாத்தாள் கசிவு குறித்து அரசு பொறுப்பேற்க வேண்டும் என இந்திய இளைஞர்களும், ஜென் சி தலைமுறையினரும் கோருகின்றனர்" என அமெரிக்காவின் The Wall Street Journal / The Newyork Times மற்றும் இங்கிலாந்தின் The Guardian பத்திரிகைகள் சுட்டிக் காட்டுகின்றன. தவிரவும் சர்வதேச மனித உரிமை அமைப்பான Amnesty International, மாணவர்கள் மீதான அரசு வன்முறையைக் கண்டித்து உள்ளது.

மாணவர்களின் போராட்டம், எவ்வளவு வலிமை வாய்ந்தது என்பதை நேபாளம், வங்கதேசம் மற்றும் இலங்கையில் நடைபெற்ற போராட்டங்கள் நமக்கு உணர்த்துகின்றன. எனவே ஒன்றியக் கல்வி அமைச்சர் தேவேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், ஊழல் மலிந்த தேசியத் தேர்வு முகமை ( National Testing Agency) கலைக்கப்பட வேண்டும் என்பதான கோரிக்கைகளை ஏற்று அமைதி திரும்ப ஒன்றிய அரசு முன்வர வேண்டும். மாணவர்களின் வாழ்வைச் சூறையாடிச் சீரழிக்கும் நீட் தேர்வை இறுதியாக ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதுமே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**- கண. குறிஞ்சி**

## டெல்லி போராட்டத்தை இந்திய அளவிலான மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்.

நீட்டுக்கு எதிரான கரப்பான் ஜனதா கட்சியின் டெல்லி போராட்டத்தை இந்திய அளவிலான மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்.

ஒன்றிய அரசின் கல்வித் துறை முறைகேடுகள் மற்றும் வினாத்தாள் கசிவுகளுக்குப் பொறுப்பேற்று மத்தியக் கல்வி அமைச்சர் பதவி விலகக் கோரியும், கல்வி அமைப்பில் சீர்திருத்தங்கள் கோரியும் டெல்லி ஜந்தர் மந்தரில் 'கரப்பான் பூச்சி ஜனதா கட்சி' அமைப்பினர், மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் முன்னெடுத்த அமைதியான நாடாளுமன்றப் பேரணியின் மீது டெல்லி காவல்துறை நடத்தியுள்ள மிகக் கொடூரமான தடியடி மற்றும் கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதல்களைத் தமிழ்த் தேசக் குடியரசு இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

o மருத்துவக் கல்விச் சேர்க்கைக்கான 'நீட்' தேர்வுக்கு எதிரான குரல், பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் மட்டுமே முதன்மையாக ஒலித்து வந்த நிலையில், தற்போது நாட்டின் தலைநகரான டெல்லியிலும் வலுவாக எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. இந்தப் போராட்டம், வெறும் ஒரு மாநிலத்தின் அல்லது சில மாணவர்களின் பிரச்சனை அல்ல; நாட்டின் ஒட்டுமொத்தக் கல்விச் சூழல், சமூக நீதி மற்றும் மாநில உரிமைகள் தொடர்பான தேசியப் பிரச்சனை என்பதை உணர்த்துகிறது. எனவே, டெல்லியில் கிளம்பியுள்ள இந்த எதிர்ப்புக் குரலை இந்தியா முழுவதும் ஒரு மக்கள் இயக்கமாகக் கொண்டு செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

o நீட் தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்தே, அது ஏழை, எளிய மற்றும் கிராமப்புறப் பின்னணியைக் கொண்ட மாணவர்களின் மருத்துவக் கனவுக்குப் பெரும் தடையாக உருவெடுத்துள்ளது. பல லட்சங்கள் செலவழித்துத் தனியார் பயிற்சி மையங்களில் படிக்கும் வசதி படைத்த மாணவர்களுக்கே மருத்துவ இடங்கள் சாத்தியம் என்ற நிலை

உருவாகியுள்ளது. இது நாட்டின் அடிப்படைச் சமூக நீதிக்கு முற்றிலும் எதிரானது.

o சமீபகாலமாக நீட் தேர்வில் வெளிச்சத்திற்கு வந்துள்ள வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம் மற்றும் மதிப்பீட்டு முறைகேடுகள், இத்தேர்வு முறையின் நம்பகத்தன்மையை ஒட்டுமொத்தமாகச் சீர்குலைத்துள்ளன. தமிழகம் தாண்டி வடஇந்திய மாநிலங்களிலும் மாணவர்கள் நடுவில் இது பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரே கட்ட மையப்படுத்தப்பட்ட தேர்வு முறை எவ்வளவு பலவீனமானது என்பதற்கு இதுவே சான்று.

o ஒவ்வொரு மாநிலத்தின் பாடத்திட்டம், சமூக- பொருளாதாரப் பின்னணி மற்றும் மருத்துவக் கட்டமைப்பு ஆகியவை வெவ்வேறானவை. மாநிலங்களின் அதிகாரத்தில் தலையிட்டு, அனைவருக்கும் ஒரே தேர்வு முறையைத் திணிப்பது இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத்தைச் சிதைப்பதாகும். கல்வி உரிமையை மாநிலங்களின் முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதே இதற்கான நிரந்தரத் தீர்வாக அமையும்.

எனவே, "நீதி கேட்கும் மாணவர்களின் குரல் டெல்லி வீதிகளோடு நின்றுவிடக் கூடாது; அது இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்தின் வீடுகளையும் சென்றடைய வேண்டும்."

**- க. இரா. தமிழரசன்**

## சொகுசுப் பதவியைத் துறப்பாரா?

நீட்டுத் தேர்வில் நெடுநாள் ஊழல்
நிறையக் கேள்வி நேரே கேட்போம் !
போட்டித் தேர்வே போலி யென்றால்
பொறுப்புக் கூற வேண்டு மென்போம் !
மாட்டிக் கொண்ட கல்வி யமைச்சர்
மறந்தும் கூட வாயைத் திறவார் !
வீட்டுக் கொருவர் விளக்கம் கேட்பின்
விதிகள் மாறும் வீதி நிமிரும் !

சோனம் வாங்சுக் சொல்வ தனாலே
சொகுசுப் பதவி துறப்பா ரமைச்சர் ?
மானம் கொஞ்சம் மனத்தி லிருந்தால்
மக்க ளுணர்வை மதிப்பார் எனலாம் !
நாணங் கெட்ட நடப்பாய் வினாத்தாள்
நன்றாய்க் கசிந்த நாட்டில் யாரும்
வானம் பார்த்து வாளா திருக்க
வடிகட் டியவீண் முட்டா ளில்லை !

உண்ணா நிலையி லொருபோ ராட்டம்
உணர்ந்தா ரில்லை ஆட்சி யாளர் !
கண்ணா நீயும் காணா திருந்தால்
காலந் தோறும் தவறே நடக்கும் !
இன்னா செய்தா ரென்றே தெரிந்தால்
இறங்கிக் களத்தில் எதிர்த்துக் கேட்பாய்!
அன்னார் கேட்டும் அறத்தின் வழியில்
அரக்கர் மனத்தில் இரக்கம் இல்லை !

கல்வி வேலைக் கான தேர்வுங்
கடையிற் சரக்காய்க் கசிந்த போதுஞ்
சொல்லிக் காசே சுழன்ற போதுந்
தொல்லை யாலே துவண்டா ரிளையோர்
நல்லார் சிலரே நயன்மை கேட்டு
நடக்கும் போரில் முன்னின் றாலும்
பல்லோர் திரண்டே பாரில் வந்தால்
படையே பதவி பறிக்கக் காண்பார் !

**- ஆற்றலரசு**

## களம் காண உறுதியேற்போம்...

கல்விக் குறித்த சட்டமியற்றும் அதிகாரம் மாநிலங்களிடமிருந்துப் பறிக்கப்பட்டுப் பொதுப்பட்டியலுக்குக் கொண்டுச் செல்லப்பட்டதன் விளைவு நீட் போன்ற நுழைவுத் தேர்வுகள் தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் உள்ள மாணவர்களின் மருத்துவப் படிப்பைக் கனவாக மாற்றியுள்ளன.

தகுதியற்ற தகுதித் தேர்வுகள் பல மாணவர்களின் உயிரை இன்று வரை காவு வாங்கிக் கொண்டிருக்கின்றன.

இதை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிற மாணவர்கள், இளைஞர்கள் மீது இந்திய ஒன்றிய அரசு எனும் ஆரியப் பாசிச பயங்கரவாத அதிகாரக் கூட்டம் இராணுவ ஏவல் படைகளைக் கொண்டு தொடர்ந்து மாணவர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து வருகிறது தலைநகர் தில்லியில்..

காவிகளைக் கேள்வி கேட்க மாணவர்கள் ஒன்றிணைந்து நிற்கின்றனர்.

தமிழகத்திலும் மாணவர்கள் அமைப்புகள் தில்லி போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஆனால், தமிழக அரசோ தலைநகர் தில்லியில் குருதி கொட்டப் போராடும் பிள்ளைகளைக் கொடூரமாக அடித்தும் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசியும் வன்முறை வெறியாட்டம் போடும் இராணுவத்தையும் வேடம் தரித்த ஆரிய பார்ப்பனியக் கூலிப்படைகளையும் கண்டும் காணாமலும், கண்டக்குரல் கூட எழுப்பாமலும் மௌனமாக இருக்கிறது.

மேலும், தமிழ்நாட்டில் குரல் எழுப்ப முன்வரும் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியும் , அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் பல்வேறு அமைப்புத் தோழமைகளை காவல் துறையைக் கொண்டு அச்சுறுத்தியும் உரிமைகளை நசுக்குகிறது.

மற்றொரு பக்கம் மாணவர்களின் போராட்டத்தைச் சில ஆரியப் பார்ப்பனியக் கூட்டங்கள் பலதரப்பட்ட பொய்மை விமர்சனங்களையும் அவதூறுகளையும் பரப்பிப் போலியாக்கத் துடிக்கின்றனர். இதனை அரசியலாக்க நினைக்கிறது சில கூட்டம்.

ஆனால், இந்தசீ சில்லறைக் காரணங்களை எல்லாம் கடந்து நம் பிள்ளைகளின் கல்விக் கனவை வேரோடுச் சாய்க்கும் உயிர்க் கொல்லியான நீட் தேர்வை நீக்கம் செய்வதற்காகக் களத்தில் நிற்கும் பிள்ளைகளுக்குத் துணை நின்று கைதூக்கி விட வேண்டிய தேவை தமிழ்நாட்டு மக்களுக்கும், சனநாயக இயக்கங்களுக்கும் உண்டு.

ஆனால், அதை மறந்து தமிழக இளைஞர்கள் முதலமைச்சரின் சனநாயகம் படம் வெற்றி பெற முட்டிப்போட்டு மண்சோறு உண்ணுகிற அவலம் அரங்கேறுகிறது தமிழ்நாட்டில்.

இச்சூழலில் தமிழ்நாட்டு மக்கள் மௌனத்தை உடுத்தி நிற்பது அவமானத்திற்குரியது.

தில்லியில் உள்ள பிள்ளைகள் மட்டும் தான் நீட் எழுதுகிறார்களா? தமிழக பிள்ளைகள் எழுதவில்லையா? அனிதா தொடங்கி இன்று வரை தமிழகத்தில் நீட் என்ற உயிர்க் கொல்லியினால் எத்தனை மரணங்கள்...!?

மாணவர்களே! இளைஞர்களே! பொதுவுடமை இயக்கங்களே! பெரியாரிய அம்பேத்கரிய கொள்கையாளர்களே! தமிழ்த் தேசிய விடுதலை தோழமைகளே! சனநாயக இயக்கங்களே! பொதுமக்களே! நாம் என்ன செய்யப் போகிறோம்

இப்போது குரல் கொடுக்காமல் நாம் வேறு எப்போது குரல் கொடுக்கப் போகிறோம். மாணவர்களின் மீதான தாக்குதல்களையும் அரசின் பயங்கரவாதத்தினையும் நாம் வேடிக்கை மட்டுமே பார்க்கப் போகிறோமா? வரலாற்றுப் பிழையைச் செய்து விடாமல் வாருங்கள்.. புறப்படுவோம்!

அமைந்து நாம் இருக்கும் ஒவ்வொரு நிமிடமும் நம் மண்ணின், நம் மக்களின் ஒவ்வொரு உரிமையும் ஆரியப் பார்ப்பனிய இந்துத்துவ பாசிச பயங்கரவாத இந்திய ஒன்றிய அரசால் கொள்ளையடிக்கப்படுகிறது என்பதை மறவாதீர்கள்.

ஓ...! தமிழ்நாட்டு மக்களே...! உறுதி எடுப்போம் நம் மண்ணிற்கான, நம் மக்களுக்கான, நம் பிள்ளைகளுக்கான உரிமைப் போராட்டத்தை முதல் வரிசையில் களம் காண உறுதியேற்போம்... வெற்றி பெறுவோம்...

**- தமிழிசைப்பா.**

# கீழடி அறிக்கையை மாற்றுவது குற்றச் செயல், ஒழுக்கமற்ற நடவடிக்கை - ஆய்வாளர் அமர்நாத் கடும் சீற்றம்.

இன்றைய (17/07/2025) The Times of India நாளிதழில் கீழடியை அகழாய்வு செய்து அரிய உண்மைகளை வெளிப்படுத்திய தொல்லியல் துறை இயக்குநர் அமர்நாத் இராமகிருட்டிணன் அவர்களது விரிவான நேர்காணல் வெளிவந்துள்ளது. அதன் முக்கியப் பகுதிகளைச் சுருக்கமாகப் பதிவிட்டுள்ளேன்.

கீழடி அறிக்கையில் என்னால் மெய்ப்புத் திருத்த முடியும் (Proof read) பிழையான சொற்களை மாற்ற முடியும். ஆனால் அதன் அடிப்படைக் கொள்கையை மாற்றினால், நான் ஒரு குற்றவாளி ஆகிவிடுவேன். ஆய்வின் தொடக்கத்தில் பெறப்பட்ட தகவல்களை மாற்ற வேண்டும் என நீங்கள் கோரினால், அதன் தார்மீக மதிப்பீட்டை நீங்கள் நாசமாக்குவதாக அமைந்துவிடும் என அமர்நாத் அவர்கள் தெளிவுபடுத்தினார்.

கீழடி அறிக்கை, அறிவியல் வழியில் அடரத்தியானது அல்ல, தொழில்நுட்ப அளவிலும் அது உறுதிப்படுத்த முடியாதது எனும் ஒன்றியப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கஜேந்திர சிங்கின் கருத்துக் குறித்து அமர்நாத் அவர்களிடம் கேட்ட பொழுது,

*"கீழடி அறிக்கையை முதலில் படிக்குமாறு அவரிடம் சொல்லுங்கள்"* என அமர்நாத் பதிலளித்தார்.

கீழடி நாகரிகத்தின் தொன்மையை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சி நடைபெறுகிறதா என அவரிடம் கேட்கப்பட்ட பொழுது, *"அவர்கள் அப்படிச் செய்வதாகத்தான் தோன்றுகிறது "* என அமர்நாத் கூறினார்.

*"பன்முகப் பண்பாட்டைக் கொண்டது இந்தியா. இது குறித்த விழிப்புணர்வை நாம் மக்களிடம் உண்டாக்க வேண்டும். சிந்து வெளி நாகரிகம், வேத நாகரிகம் மற்றும் மவுரிய , ஹர்ஷவர்த்தன மன்னர்களின் வழிவழி மரபுகளைப் பற்றி எப்பொழுதும் அவர்கள் பேசிக் கொண்டு இருக்கிறார்கள். நாட்டின் பிற பகுதிகளை ஏன் நீங்கள் பார்ப்பதில்லை?"* எனவும் அமர்நாத் அவர்கள் வினவினார்.

*"இங்கு சங்ககாலப் பண்பாடு உள்ளது. இன்றைய நாள்வரை சங்க காலம் குறித்து நாம் தீர்மானிக்காமல் இருக்கிறோம்."* எனவும் அமர்நாத் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

கீழடி மூன்றாம் கட்ட அகழாய்வு குறித்து ஓய்வு பெற்ற தொல்லியலாளர் பி.எஸ். சிறீராமனிடம் மீண்டும் அறிக்கை சமர்ப்பிக்கக் கோரியது குறித்து அமர்நாத் அவர்களிடம் கேட்ட பொழுது, *கீழடி குறித்த பின்புல அறிவு இல்லாத ஒரு நபர், அகழாய்வு ஆய்வு விவரங்களை அறியாத ஒருவர், கீழடியில் ஒன்றுமில்லை என எப்படி மிக எளிதாகக் கூறி விட முடியும்?"* எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும் அவர் கூறும் பொழுது, *"அகழாய்வின் அடிப்படையில் கீழடியின் காலம் உறுதிப்படுத்தப்படுகிறதே அன்றி, ஊகத்தின் அடிப்படையில் அல்ல. அதை நான் எப்படிச் சிதைக்க முடியும்? எந்த ஓர் அகழாய்வு அறிக்கையிலும். மெய்ப்பு மட்டும் திருத்தப்படுமே அன்றி, அடிப்படை மாற்றங்கள் ஏதும் செய்யப்படுவதில்லை. ஒரு நிழற்படம் இல்லாமல் இருந்தாலோ, மேலும் ஒரு கூடுதலான செய்தி சேர்க்கப்பட வேண்டி இருந்தாலோ, அதைச் செய்யலாம். இவை தவிர, வேறு எதுவும் செய்வதில்லை "*

எனத் தொல்லியல் துறைக்காக 25 ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்த 51 வயது அமர்நாத் அவர்கள், ஜெயா மேனன் அவர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் குறிப்பிட்டது...

● சங்க காலம் என்பது கி.மு.300 முதல் கி.பி.300 வரை என எளிதாகக் குறிப்பிடுகிறோம். ஆனால் இதை உறுதிப்படுத்த அறிவியல் வழியிலான ஆதாரம் ஏதுமில்லை. இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே கூறுகிறோம். ஆனால், இப்பொழுது தொல்லியல் பொருட்களைக் கொண்டு சங்க காலம் குறித்து மீளாய்வு செய்யும் வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது.

● கீழடியில் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள் ஏதுமில்லை எனச் சிறீராமன் கூறுவது அவரது கண்ணோட்டம். ஆனால், கீழடி என்பது வலிமையான ஓரிடம். கீழடியை நான் புரிந்து கொண்டிருக்கிறேன், அதை அகழாய்வு செய்துள்ளேன், வைகை நதியை மதிப்பிட்டுள்ளேன். அதனால் அதன் முக்கியத்துவத்தைக் கண்டறிந்தேன். அதனால்தான், கீழடியிலிருந்து 700 மீட்டர் தூரத்தில் இருக்கும் இடுகாட்டுப்பகுதியான கொந்தகை எனுமிடத்தையும் ஆய்வு செய்ய என்னை அனுமதியுங்கள் என ஒன்றிய அரசை நான் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன். அதனால் இடுகாடு மற்றும் வாழிடம் ஆகிய இடங்களை ஒப்பிட அது .உதவியாக இருந்திருக்கும்.

● தொல்லியல் துறை சார்பாக எனது கீழடி ஆய்வு வரைவறிக்கையில் ஹேமசாகர் நாயக் சில "திருத்தங்கள்" செய்யச் சொல்கிறார். ஆனால் கீழடியை நான் அகழாய்வு செய்துள்ளேன். அதன் காலத்தை உறுதிப்படுத்தி உள்ளேன். அங்குள்ள பாறை அடுக்குகள் குறித்த முடிவுகளையும், பண்பாட்டுத் தாக்கங்களையும், பண்பாட்டுப் படிமங்களையும் உரிய முறையில் வழங்கியுள்ளேன். இந்தக் கண்டுபிடிப்புகளை எனது அறிக்கையில் நியாயப்படுத்தி உள்ளேன். இத்தகைய கோட்பாடுகள் மாற்றப்பட வேண்டுமானால், அவர்கள் கீழடியை மீண்டும் திரும்ப ஆய்வு செய்ய வேண்டும்.. அப்படிச் செய்து, கீழடியின் காலம் என்ன என்பதை அவர்கள் சொல்லட்டும்.

● இந்தியத் தொல்லியல் துறை பதிப்புப் பகுதியில் 25 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தொல்லியல் துறை மேலாளர் அருந்ததி பேனர்ஜி என்னிடம் கூறும் பொழுது, *அகழாய்வு செய்த ஒருவரிடம் திருத்தங்கள் செய்யுமாறு கேட்பது தொல்லியல்துறை வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை* எனக் குறிப்பிட்டார்.

● அயோத்தி அகழாய்வு குறித்தறிய மாநில, ஒன்றிய, சர்வதேசிய, நீதித்துறை சார்ந்த குழு ஒன்றை நியமித்தது போல கீழடி குறித்தும் ஒரு குழு அமைத்து மீளாய்வு செய்யட்டும் எனப் பரிந்துரைக்கிறார்.

● தொல்லியல் துறைக்கு நான் அனுப்பிய பதிலுக்குப் பிறகு அவர்கள் இதுவரை கேள்வி ஏதும் கேட்கவில்லை.

● எனது அறிக்கையிலிருந்த சிறிய பிழையான சொற்கள் (Spelling corrections) மற்றும் காலம் குறித்துப் பெயர் சூட்டியமை ஆகியவை பற்றித் தான் நான் ஒப்புக் கொண்டேன். இவற்றை மட்டுமே மாற்ற நினைக்கிறேன். ஆனால் கீழடி குறித்த காலத்தில் மாற்றம் செய்ய நான் மறுக்கிறேன். இது குறித்து எனது அறிக்கையில் அனைத்து வகையான ஆவணச் சான்றுகளும் உள்ளன. (கீழடியின் காலம் கி.மு. 800 முதல் கி.பி. 500 வரை என அமர்நாத் கண்டறிந்துள்ளார்)

● இந்தியத் தொல்லியல் துறை, முதன் முதலில் முறையாக ஆய்வு செய்த வாழிடப் பகுதி கீழடிதான். இங்குத் தொன்மையான நாகரீகம் நிலவி வந்துள்ளது. கி.மு..500 முதல் கி.பி. ஒன்றாம் நூற்றாண்டு முடிவு வரை, கீழடி முழுமையான நகர வாழ்விடமாக இருந்து வந்திருக்கிறது. அப்பொழுது செங்கல் கட்டடங்களும், வட்ட வடிவக் கிணறுகளும், முறையான கழிவுப் பாதைகளும் இருந்துள்ளன.

● 2013 - 14ஆம் ஆண்டில், நாங்கள் கீடியை ஆய்வுக்குட் படுத்தினோம். தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரத்தின் வழியாக ஓடும் வைகை நதியின் இடது மற்றும் வலது கரைகளில் 293 இடங்களைக் கண்டறிந்தோம். அதனூடகக் #குந்தகை குறித்து அறிய வந்தோம். கீழடியில் வாழ்ந்தவர்கள் குந்தகையில் புதைக்கப்பட்டனர். எனவே குந்தகை பகுதியில் மூன்றாம் கட்ட அகழாய்வை மேற்கொள்ள வேண்டினேன். ஆனால் அனுமதி மறுக்கப்பட்டது,

● சிந்துப் பள்ளத்தாக்கில் தோராயமாக 13,000 சதுர கிலோமீட்டர் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதனால் 10,000 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. சிந்து வெளி நாகரிகம் என்பது அரப்பா மற்றும் மொகஞ்சதாரோவில் மட்டுமே மையங்கொண்டிருக்க வில்லை. பஞ்சாப், இராஜஸ்தான், அரியானா, குஜராத் மற்றும் பாகிஸ்தான் / ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளிலும் பல அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால்தான் இதை மிகப்பெரிய நாகரிகம் என நாம் கூறி வருகிறோம். சிந்துவெளி போல, கீழடிப்பகுதியிலும் விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்.

**- கண குறிஞ்சி** 17.7.25 பதிவு

# என்.எல்.சி. நிறுவனத்தை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைத்துவிட்டு இந்திய அரசு வெளியேற வேண்டும்!

முழு என்எல்சி யை விற்றாலும் பாஜகவின் பணப்பசி அடங்காது!

கார்ப்பரேட்டுகளின் கையாள் பாஜக அரசின் என்எல்சி பங்கு விற்பனை கைவிடப்பட வேண்டும்! அல்லது தமிழக அரசே 3 விழுக்காடு பங்குகளை விலைக்கு வாங்கிப் பொதுத்துறையைப் பாதுகாக்க வேண்டும்!

பாஜக அரசின் என்.எல்.சி. பங்கு விற்பனையைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாட்டின் அரசும் அவசரமாக இதுகுறித்துத் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்!

இந்திய ஒன்றிய அரசு பொதுத்துறை நிறுவனங்களை விற்றுத் தன் பணத் தேவையைத் தீர்த்துக் கொள்கிறது. இப்படிப் பொதுத்துறை நிறுவனங்களை விற்று ரூபாய் 4.73 இலட்சம் கோடிகளுக்கு மேல் பணம் திரட்டி ஊதாரித்தனமாகச் செலவழித்திருக்கிறது.

2002 இல் என்எல்சி பங்குகளை விற்க வாஜிபாயி முயற்சி செய்தபோது தமிழ்நாட்டின் கடும் எதிர்ப்பால் விற்காமல் நிறுத்திக் கொண்டார்.

2013 இல் மன்மோகன் சிங் அரசு என்எல்சி பங்குகளை விற்க முனைந்த போது, ஜெயலலிதா அம்மையார் தலைமையிலான தமிழக அரசே 3% பங்குகளை வாங்கி அதைப் பொதுத்துறையாகத் தொடர பாதுகாத்தது.

2014 இல் நரேந்திர மோடி பிரதமராக வந்த பிறகு 27% என்எல்சி பங்குகளை விற்றுத் தீர்த்து இருக்கிறார். இப்போது, என் எல் சி யின் 3% பங்குகள் 1257 கோடிக்கு விற்கப்பட்டுள்ளன. இதனால் என்எல்சி மீதான அரசின் கட்டுப்பாடு 69% ஆகக் குறைந்துள்ளது.

எதை விற்றாலும் பாசிச பாஜக அரசின் பணத்தேவை தீரப் போவதில்லை.

ஊதாரி பாஜக அரசு பொதுத்துறை நிறுவனங்களை கார்ப்பரேட்டுகளிடம் விற்றுக் காசாக்கித் தன் தேவையை நிறைவு செய்து கொள்ள விரும்புகிறது.

2014- ஆம் ஆண்டு நரேந்திர மோடி பிரதமராக பதவியேற்றபோது இந்தியாவின் மொத்த கடன் ரூ. 55.87 இலட்சம் கோடியாக இருந்தது. தற்போது நாட்டின் மொத்தக் கடன் ரூ.214 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. இது அல்லாமல் இந்தியப் பொதுத்துறை நிறுவனங்களை 4.73 இலட்சம் கோடிக்கு மோடி அரசு விற்பனை செய்து செலவு செய்துவிட்டது.

பாஜக அரசின் பொதுத்துறை நிறுவன விற்பனை தொடருமானால், ஒரு கட்டத்தில் என்எல்சி முழுமையாகக் கார்ப்பரேட்டுகளின் கைக்குச் சென்று விடும். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய மிகப்பெரிய சொத்து, ஆசியாவின் மிகப்பெரிய நிலக்கரி வயல், இயற்கை தமிழ்நாட்டுக்கு அளித்த பெருங்கொடை இன்று இந்திய ஒன்றிய அரசின் கையில் அகப்பட்டுச் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது.

என்எல்சி - ஐ இந்திய ஒன்றிய அரசிடம் இருந்து மீட்க வேண்டும்.1956 - ஆம் ஆண்டு, ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோது 69 கோடி / மனை நாடு அரசிடம் ஒப்படைத்து விட்டு ஒன்றிய அரசு வெளியேற வேண்டும்!

1956 லிருந்து 2026 வரை 70 ஆண்டு காலத்தில் என்எல்சி நிறுவனத்தின் மூலம் இந்திய ஒன்றிய அரசு அகழ்ந்தெடுத்த நிலக்கரி முழுவதும் தமிழ்நாட்டுக்கே சொந்தமானது! எந்த வகையில் பார்த்தாலும் என் எல் சி நிறுவனம் தமிழ்நாட்டுக்குத்தான் சொந்தமானது! தற்போது எழுந்துள்ள பிரச்சனைக்குத் தீர்வாகக் கார்ப்பரேட்டுகளுக்கு விற்பனை செய்யப்படும் 3% பங்குகளையும் தமிழ்நாடு அரசே வாங்கி என்எல்சி நிறுவனம் பொதுத்துறை நிறுவனமாகத் தொடர வழி செய்ய வேண்டும்! என்எல்சி நிறுவனத்தைத் தமிழ்நாட்டுக்கு உரிமையாக்கும் கோரிக்கையைத் தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் எழுப்ப வேண்டும்!

**- பேராசிரியர் த.செயராமன்**

## திருவள்ளுவர் ஆண்டைப் பயன்படுத்துவது பற்றியும் பாவாணர் அவர்கள் பயன்படுத்தியது பற்றியும் சில விளக்கங்கள்..

திருவள்ளுவர் ஆண்டைப் பயன்படுத்துவது பற்றியும் பாவாணர் அவர்கள் பயன்படுத்தியது பற்றியும் சில விளக்கங்களையும் தெரிந்து கொள்வது நல்லது..

திருவள்ளுவர் ஆண்டு முறையும், சுறவ(தை)த் திங்களையே திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்க மாதமாக ஏற்கிற பழக்கமும் 1948 ஆண்டு முதலே செந்தமிழ்ச்செல்வியில் நடைமுறைக்கு வந்துவிட்டது. மறைமலை அடிகளார் வாழும் காலத்திலேயே அத்தகைய நடைமுறை அவரின் மருமகனார் நடத்திவந்த **செந்தமிழ்ச்செல்வி** இதழில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆயினும், பாவாணரின் நூல்களில் ஆங்கில ஆண்டு முறையே 1967 வரை குறிக்கப்பட்டு வந்திருக்கிறது..

1967 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வெளியான **தமிழ் வரலாறு** - நூல் முகவுரையின் இறுதிப்பகுதியில்தான், திருவள்ளுவர் ஆண்டு 1998 என்றும், 12 கும்பம் என்றும் தமிழ் மாதத்தைத் தமிழ் எண்களிலேயே பதிவிட்டிருக்கிறார் பாவாணர்.

பொதுவாக நாள், மாதம், ஆண்டு என்கிற வகையில் வரிசைப்படுத்துவது ஆங்கில அமைப்பு முறை என்றும், ஆண்டு மாதம் நாள் என வரிசைப்படுத்துவதே தமிழ் முறை என்றும் **வலம்புரி** இதழில் கேள்வி விடைப் பகுதியில் 1971 ஆம் ஆங்கில ஆண்டின் இறுதியில் **புலவர் இறைக்குருவனார்** அவர்கள் விளக்கம் தந்திருந்தார். பாவாணர் அவர்கள் அக்காலத்திற்குப் பிறகு பிறர்க்கு எழுதிய மடல்களில், பதிவுகளில் ஆண்டு, மாதம், நாள் என்கிற வரிசையிலேயே தமிழ் ஆண்டு மாத நாளைக் குறித்திருந்தார் என்பது அறிதற்குரியது.

**- பொழிலன்**

# இட ஒதுக்கீடு

- தங்க. குமரவேல்

இட ஒதுக்கீடு என்பது படிநிலை ஏற்றத்தாழ்வுடன் கூடியது. பல்வேறு சாதிகளைச் சேர்ந்த மக்களுக்கான கல்வி வேலைவாய்ப்பு உரிமைகளைப் பெறுவதற்கான ஒரு வழிமுறையாகும். இது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என அழைக்கப்படுகிறது, சமூக நீதி என்றும் அழைக்கப்படுகிறது. சமூக நீதியில் சென்னை மாகாணம் என்று அன்று அழைக்கப்பட்ட தமிழ்நாடுதான் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இன்று திகழ்கிறது.

சமத்துவத்துக்கும் சமூக நீதிக்கும் உள்ள வேறுபாட்டை அறிவதில் பலருக்கும் பெரும் குழப்பம் உள்ளது. இதனை இரண்டு எடுத்துக்காட்டுகள் வாயிலாக நாம் விளக்கலாம். ஒரு வீட்டில் நான்கு குழந்தைகள் இருந்தால் அந்த நால்வருக்கும் ஆளுக்கு நான்கு இட்டலிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டால் அது சமத்துவம் ஆகும். நான்கு குழந்தைகளின் ஆரோக்கிய நிலைகளும் கணக்கில் கொள்ளப்பட்டு ஆரோக்கியம் குறைவாக உள்ள குழந்தைக்கு ஒன்று அல்லது இரண்டு இட்டளிகள் அதிகமாகக் கொடுத்தால் அது சமூக நீதியாகும்.

ஒரே அளவு உயரமுள்ள மேசை (டேபிள்) போட்டு அதன் மீது ஏறி நின்று கால்பந்தாட்ட மைதானத்தில் பார்ப்பது சமத்துவம். ஆட்டம் பார்ப்பவர்களின் உயரத்திற்கு ஏற்ப மேசைகளைப் போட்டு அனைவருக்கும் ஆட்டத்தைப் பார்க்க ஏற்படுத்திக் கொடுப்பது சமூக நீதி ஆகும்.

தற்போது நடைமுறையில் இருக்கும் இட ஒதுக்கீடு முறை ஓரளவு பயனுடையதாக இருந்தாலும் 50 சதவீத பொதுப் பிரிவு என்பதை ஒரு மோசடியாகவே நாம் பார்க்கிறோம். மேலும் பொருளாதாரத்தில் பின் தங்கிய முன்னேறிய சாதிகளுக்கு (அரிய வகை ஏழைகள்) இட ஒதுக்கீடு என்பது ஒரு பெரும் மோசடி ஆகும்.

### முன்னேறிய சாதிகளுக்கும் இட ஒதுக்கீடு தேவை

இந்தத் தலைப்பப் பார்த்தவுடன் பலர் அதிர்ச்சி அடையலாம். ஆனால் பொதுப்பிரிவு என்னும் சட்டகத்துக்குள் இந்திய மக்கள் தொகையில் 5 சதவீதமே உள்ள முன்னேறிய உறுப்பினர் 50 சதவீத இட ஒதுக்கீட்டை அனுபவிக்கின்றனர். இது எவ்வளவு பெரிய மோசடி என்பதை இந்தக் கட்டுரையை வாசிப்பவர்களே புரிந்து கொள்ள வேண்டும். பொதுப் பிரிவு என்பதையே நீக்கிவிட வேண்டும் என்பதுதான் நம் நிலைப்பாடாகும்.

100 சதவீத இட ஒதுக்கீடு மற்றும் முன்னேறிய சாதிகளுக்கு 5 சதவீத இட ஒதுக்கீடு என்பதுதான் நாம் முன்வைக்கும் புதிய இட ஒதுக்கீட்டு கொள்கையாகும்.

### 100 சதவீத இட ஒதுக்கீடு

இட ஒதுக்கீடு 100 சதவீதம் ஆக்கப்பட்டு பொதுப் பிரிவு முறை நீக்கப்பட வேண்டும் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப பட்டியல் பழங்குடிகள், பட்டியல் வகுப்பினர், சீர் மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முன்னேறிய வகுப்பினர், மதச் சிறுபான்மையினர் ஆகிய சமூக பிரிவினருடன் சாதி மறுப்பு திருமணம் செய்தோர் மற்றும் அவர்களின் வாரிசுகள் சாதி- மதம் குறிப்பிட விரும்பாதோர் ஆகியோரை உள்ளடக்கிய சாதியற்றோர் என்னும் புதுப் பிரிவை உருவாக்கித் தொடக்க நிலையில் அவர்களுக்கு 10 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். சாதியற்றோர் எண்ணிக்கை பெருகும் போது அதற்கு ஏற்ப இட ஒதுக்கீட்டு சதவீதம் உயர்த்தி வழங்கப்பட வேண்டும். இது தான் இட ஒதுக்கீடு குறித்த நம் நிலைப்பாடாகும்.

### மக்கள் தொகை கணக்கெடுப்பில் நாம் செய்ய வேண்டியது

இந்திய ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை நடத்த முடிவுச் செய்துள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது சாதி, மதம் கேட்கும் இடத்தில் சாதியற்றோர் மதமற்றோர் என்று பதிய ஓர் இடத்தைப் புதிதாக ஏற்படுத்த வேண்டும் என இந்திய ஒன்றிய அரசை நாம் வலியுறுத்துகிறோம். சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டோர் அவர்களின் வாரிசுகள் சாதியை ஒழிக்க விரும்பும் முற்போக்காளர்கள் ஆகியோர் தங்களைச் சாதியற்றோர் என மக்கள் தொகை கணக்கெடுப்பில் பதிவுமாறு தமிழ்நாடு மக்கள் விடுதலை இயக்கம் கேட்டுக்கொள்கிறது.

தற்போதுள்ள இட ஒதுக்கீட்டின்படி சாதியற்றோர் பிரிவும் இல்லை அதற்கான இட ஒதுக்கீடும் இல்லை இந்த நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சாதி அற்றோர் என்று பதிந்தால் நடைமுறையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் இட ஒதுக்கீட்டு பயனை இலக்க நேரிடும் என்கிற அச்சம் சாதியை ஒழிக்க விரும்பும் முற்போக்காளர்களிடமும் நிலவுவதால் தமிழ்நாடு அரசு சாதியற்றோருக்கான 10 சதவீத இட ஒதுக்கீடு கொண்டுவர அவசர சட்டம் இயற்ற வேண்டும். அப்போதுதான் இட ஒதுக்கீடு என்னும் சமூக நீதி சாதி ஒழிப்புக்கான கருவியாக மாற்றப்படும் அதுவரை அது பல்வேறு படிநிலையில் உள்ள சாதிகளுக்கான உரிமையாக மட்டுமே நீடிக்கும் அது ஒருபோதும் சாதியை ஒழிக்காது. ●

### சாவது ஒருமுறைதான் போராடு அச்சமில்லை ..!

பி.சீ.நல்லரசன்

நீட்டுன்னு பேரு வச்சி
நிறைய பேர கொன்னுட்டான்
அடிக்கிறதே வேலையின்னு
வீதியில நின்னுட்டான்

உரிமைகள கேட்டாக்கா
இரத்தம் சிந்த வேண்டுமா...?
குண்டாந்தடி குருதியோ
வன்முறையைத் தூண்டுமா...?

அதிகார திமிரெல்லாம்
உடைஞ்ச கதை தெரியுமா ..?
அடையாளம் தெரியாம
அழிஞ்சதெல்லாம் புரியுமா..?

கதறக்கதற தாக்குறீயே
இதுவா சனநாயகம்
காலம் மாறும் காத்திரு
உதிக்கும் ஒரு புது யுகம்

மாணவர்கள் சினம் கொதித்து
தடை உடையும் பாரு
மக்களோட ஆதரவும்
திரளுது பல நூறு

சர்வதிகாரம் வென்றதாக
சரித்திரங்கள் இல்லை
சாவது ஒருமுறைதான்
போராடு அச்சமில்லை ..!

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. அறவேந்தன், சென்னை | 1000 |
| திரு. தென்முகநம்பி, சென்னை | 1000 |
| திரு. பிச்சை வள்ளிநாயகம் | 500 |
| செங்குட்டுவன் ஆவடி | 500 |
| முனைவர் முத்தமிழ், சென்னை | 400 |
| செய்யது, தஞ்சை | 500 |
| தோழர் மணிவண்ணன், சென்னை | 200 |

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005